


# தூண்டில்

உள்ளே....

தற்கொலையாளிகள்
யுத்த மேகங்கள்
நாடெங்கே?
எங்களால் முடியும்
பிச்சைக்காரர்கள் பென்ஸில்
போகிறார்கள்
பலிக்கடாக்கள்
வாசுவுடன் ஓர் நேர்காணல்
நிர்ப்பந்தம்
இன்றைய நிகழ்வுகளுக்கு
கள்ளர் கூட்டு
அகதிகள்
சேந்தன் எங்கே?



52



Tamilische Zeitschrift

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# நிர்ப்பந்தம்



பாதிப் பகல் பொழுது
பார்த்தபடியே மறைகையிலே
ஏயென்சி வந்து சொன்னான்
ஐந்துமணி Flight என்று.

கோபுரமாய் நின்ற நான்
கோடை மருதம் போல
வாடியிருக்கையிலே
வையமதே வானாகியது.

இலுப்பம் கொட்டையையும்
பிலாச் சருகையும் இனி
எப்போ நான்
பொறுக்கிடுவேன்?

சூறாவளி போல
சுற்றியது என் மனம்.
எங்கள் கிராமத்தை
எப்படி நான் மறந்திட?

சீமைக்குச் சென்று
சிந்திய கழிசடையை
சேமித்துத்தான் என்
சேரி திரும்புவேனோ?

நாகரிகம் என்று
நாறும் கலாசாரத்தில்
மூழ்கா வரம் ஒன்று
எனக்கருள வேண்டும் என்று
யாரிடம் நான்
கெஞ்சிடுவேன்?


பானையிலே கூழ் காச்சி
ஆச்சி பகிர்ந்தளிக்க
சுற்றத்தாருடன்
சுற்றி வர இருந்து
குடித்து மகிழ்ந்தது
இனி எப்போ வருமென
ஏங்கியது என்னிதயம்.

வெளிநாட்டு எண்ணத்தில்
வெற்றிடமாய் இருந்த உள்ளம்
நியாயத்தை கேட்டதற்காய்
நிர்ப்பந்தம் இதுதானா?

*
ஜெகன்



# பிச்சைக்காரர்கள் பென்ஸில் போகிறார்கள்



ஜேர்மனியிலிருக்கும் அகதிகள், வெளிநாட்டவர் பற்றி 8ஆம் வகுப்பில் படிக்கும் 14 வயது ஜேர்மனிய மாணவனின் கருத்து...

வெளிநாட்டவரை எதிர்ப்பது என்னுடைய கொள்கையில்லை. அவர்கள் இங்கு உல்லாசப் பிரயாணிகளாக வருவதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் பெருந்தொகையான வெளிநாட்டவர்கள் தங்களுக்கு எந்தவிதமான அரசியற் பிரச்சினையும் இல்லாதபோது இங்கு வந்து அரசியல் தஞ்சம் கோருவதுதான் எனக்கு வெறுப்பைக் கொண்டு வருகிறது. தங்கள் வாழ்நாள் முழுவதும் கடுமையாக உழைத்துவிட்டு ஓய்வு பெற்றவர்களுக்கு கிடைக்கும் ஓய்வூதியத்தைவிட இந்தப் போலி அகதிகளுக்கு பெருந்தொகையான பணம் கிடைக்கிறது. பஸ், ட்ரெயின், ட்ராம் எதிலும் இவர்கள் ரிக்கற் எடுத்துப் பிரயாணம் செய்வதில்லை. இதை நானே அடிக்கடி நேரில் பார்த்திருக்கிறேன். பாதையில் இருந்து பிச்சையெடுப்பார்கள். பிறகு பெரிய கார்களில் உதாரணத்திற்கு கரவன் பூட்டிய பென்ஸ் காரில் போகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய குடும்பத்தில் இவற்றைப் பற்றி நாங்கள் கதைப்பதேயில்லை. எங்களுக்கு இருக்கும் பிரச்சினைகளே போதும். வெளி நாட்டவர்கள் தங்கியிருக்கும் முகாம்களைத் தாக்குவது எனக்குச் சரியாகப் படவில்லை. இவை தீர்வாக மாட்டாது. எங்கள் அரசியல்வாதிகள் மக்களை முட்டாள்களாக்கி, வாய் கிழியக் கத்தி, தாங்கள் மட்டும் வயிறு முட்ட விழுங்கிக் கொண்டு மக்களின் வரிப் பணத்தில் கொழுப்புடன் வாழ்கிறார்கள். உதாரணம் கோல். இவர்களால்தான் மக்கள் பிரச்சினையைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

இன்று வேலையற்றோர் ஏராளம். மின்சாரக் கட்டணம் 3 மடங்கு அதிகரித்துவிட்டது. வீட்டு வாடகையும், போக்குவரத்துக் கட்டணங்களும் 6 மடங்கு அதிகரித்துவிட்டன. ஆனால் அகதிகளுக்கு மட்டும் சும்மா இருக்க 5 ஆயிரம் டொச்ச மார்க்குகளுக்கு மேலாகச் சன்மானம் கிடைத்து வருகிறது.

தொடர்ந்தும் பெருமளவில் அகதிகள் எங்கள் நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாக்களிக்கவும் விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்கென்று ஒரு கட்சியை உருவாக்கி அக் கட்சியே சிலவேளை களில் இனி டொச்லாண்டை(ஜேர்மனி) ஆளவும் கூடும். இனியும் எதற்கு டொச்லாண்ட் என்ற பெயர்? தங்களுடைய சொந்த நாட்டு மக்களுக்கு உதவாமல் வெளிநாட்டவருக்காக ஏன் இவ்வளவு தொகைப் பணத்தை எங்கள் அரசியல்வாதிகள் செலவழிக்கிறார்கள் என்று எனக்கு விளங்கவில்லை.

?

?

?

?



இந்த அரசியல்வாதிகள் ஒரு கிழமைக்கு சராசரி வாழ்க்கை வாழ்ந்து பார்க்க வேண்டும். இதற்குப் பின் (உயிருடன் இருந்தால்) புரியும் அவர்களுக்கு மக்களின் பிரச்சினை பற்றி.

இங்கு வெளிவரும் `ரற்ஸ்` என்ற தினசரிப் பத்திரிகையில் வெளியா கிய இம் மாணவனின் கருத்து அகதிகள் பற்றிய சராசரி ஜேர்மனி யர்களின் கருத்தென்றால் தவறாகுமா???

---






(கலம் 50 இன் தொடர்ச்சி)

"விஷயத்தைச் சொல்லன்ரா"

"மயிர் கொட்டுதெண்டு டொக்ரீட்டை போனால் அவன் தன்ரை தலையைக் காட்டுறான்" என்றான் பாலகுமார்.

"அவற்றை மயிரிலை புடுங்கி நடட்டாமோ?" ஞானம் கிண்டினான்.

"விசர் கதை கதையாதை"

"அப்ப என்னண்டு சொல்லன்"

"டொக்ரருக்கு வழுக்கை"

ஞானமும், முத்துவும் வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தார்கள்.

"சிரிக்கிறியள் என்ன. சிரியுங்கோ. தொப்பி போட்டுக்கொண்டு போகேக்கை தெரியும்"

"உனக்கேன் இப்ப மயிர்? அதுபாட்டுக்கு கொட்டிண்ணட்டன்"


"அதுசரி. அவனவனுக்கு தலையைப் பாத்திட்டு கலியாணமே குழம்புது. நீங்கள் விளையாடுறியள்"

"இதொண்டாலைதான் உனக்கு கலியாணம் சரிவாராதெண்ட மாதிரியெல்லோ உன்ரை கதை. கண்ணாடியிலை முஞ்சையளைப் பாருங்கோ"

"உங்களுக்கு சொன்னன். எனக்குச் செருப்பாலை அடிக்க வே.." என்று பாலகுமார் முடிப்பதற்குள் போட்டிருந்த செருப்பைக் கழட்டிக் கொடுத்தான் முத்து.

( தொடர்ச்சி 7ஆம் பக்கத்தில்)

ஈழத்திலிருந்து



# தேசத்தின் குறிப்புகள்

நீண்ட நாட்களுக்குப் பிறகு திரும்பவும் ஈரோஸிடம்.

சிலநாட்களுக்கு முன்னர் ஈரோஸ் சங்கர் ராஜியின் பேட்டியொன்று வீரகேசரியில் வெளியாகியிருந்தது. அதில் அவர் பல மணிமணியான கருத்துக்களை - வழமையான ஈரோஸ் பட்டறையின் ஒரு வார்ப்பு அவர் என்ற பெயருக்கு இழுக்கு இல்லாமல் - தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்த விடயங்களின் முக்கிய அம்சம் தாம் ஆயுதங்களைக் கைவிட்டது தப்பு என்பது. இரண்டாவது, தமது அரசியல் பிழைப்பை நடாத்த புலிகளின் ஆயுதப் போராட்டம் தேவை என்பது. ஆனால் அதேவேளை வழமைபோல, "பேச்சுவார்த்தை மூலமோ அன்றி ராணுவரீதியிலோ இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை என்ற அடிப்படையிலேயே நாம் செயற்படுகிறோம்" என்று ஒரு கொழுக்கி போட்டு தனது கருத்தைத் தெரிவித்துள்ளார். இந்தக் கொழுக்கி வசதியான பக்கத்திற்குச் சாய்ந்து கொள்ளும் வாய்ப்பிற்காக.

கொழும்பில் அரசியல் நடாத்துகிற இன்னொரு அரசியல்வாதியான குமார் பொன்னம்பலம் - இவர் பல விடயங்களில் மற்றத் தமிழ்க்கட்சிகளைவிட தீவிரமான கருத்துத் தெரிவித்திருக்கிறார் என்பது வேறு விடயம் - அண்மையில் தெரிவித்த கருத்து ஞாபகத்திற்கு வருகிறது.

"இலங்கை அரசாங்கம் ஒண்



டையும் செய்யப் போறதில்லை. செய்யவேணும் எண்டதிலை அதுக்கு அக்கறையும் இல்லை. தெரிவுக்குழு எல்லாம் சுத்த மோசடி. இது எல்லாத் தமிழ்க்கட்சிகளுக்கும் புரியுது. ஆனால் ஒருதரும் என்னைப்போல இதைப் பகிரங்கமாய்ச் சொல்லத் தயாரில்லை!"

7 கட்சிகளின் 4 அம்சக் கோரிக்கைதான் கடைசியாக பஞ்சபாண்டவர் 5 வீடு கேட்டது போல இறங்கிவந்து வைக்க முடிந்த கோரிக்கை என்று தமிழ்க் கட்சிகள் தெரிவித்திருந்தன. இதிலே வேடிக்கை என்னவென்றால், வடக்கு - கிழக்கு இணைப்புத் தவிர மற்றைய மூன்றும் உருத்தெனிவற்ற 'அம்சங்கள்'. அதாவது சிங்கள மக்களின் நிலை, முஸ்லிம்களின் நிலை, அதிகாரப் பகிர்வு என்ற இவை பற்றி தமக்குள் திட்டமான முடிவுக்கு இவர்கள் வரவேயில்லை. எப்படியோ இதை வைத்துக்கொண்டு சனாதிபதியுடன் பேசினார்கள். தன்னை மகா சாணக்கியம் பொருந்தியவர் என்று நம்பிக் கொண்டிருக்கும் சனாதிபதி "வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஐ.தே.க எதிரி. உங்களுக்குள் ஒற்றுமையான ஒரு முடிவுக்கு நீங்கள் வந்தால் பரிசீலிக்க நான் தயார்" என்று பதிலளித்தார். இப்போது வடக்கு, கிழக்கு இணைப்பை விட்டுக் கொடுக்க நாம் தயாரில்லை என்று இந்தக் கட்சிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

இந்தக் கட்சிகளின் அபிப்பிராயம் எந்த அத்திவார பலமும் அற்றது. இவர்களை நம்பிய நிலையில் அரசாங்கம் இல்லை. புலிகளுடன் பேசவேண்டிய தேவை அது யுத்தம் செய்வதால் யுத்த சமநிலையைப் பொறுத்து அரசுக்கு ஏற்படக்கூடும். ஆனால் இந்தக் கட்சிகளுடன் பேசவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. இப்போது தொண்டமான் இவர்களுடன் சேர்ந்திருப்பதால் கொஞ்சம் பலமிருக்கிறது. ஈரோஸ் சங்கர் ராஜியின் கருத்துப்படி இவர்கள் எல்லோரும் நம்பியிருப்பது - அவர்கள் எவ்வளவுதான் திட்டிய போதும் - புலிகளின் அரசுக்கெதிரான யுத்தத்தையே.

"இப்போதுதான் எனக்கு விளங்குகிறது இவர்கள் ஏன் யுத்தத்தை நிறுத்து என்று கோருகிறார்கள் இல்லை என்று" என்கிறார் ஒரு அப்பாவி இராணுவர். ஒப்பிரேஷன் பலவேயக நினைத்ததைவிட கொஞ்சம் அதிகமாகவே வடக்கில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது உண்மைதான். குடாநாட்டுடன் தெல்லிப்பளை வரைக்கும் வந்த ராணுவம் திரும்பப் பின் வாங்கி நிலைகொண்டுள்ளது. திரும்ப கிளிநொச்சி, பரந்தன், வெற்றிலைக்கேணி, வண்ணான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம் பகுதிகளினூடாக இராணுவ நகர்வுக்கான முஸ்தீபுகள் தொடர்கின்றன. குண்டுவீச்சு விமானங்கள் தம்பாட்டுக்குக் குண்டுகளைச் சொரிகின்றன. குறிதவறாது புலிகளின் வாகனங்களையும், நிலைகளையும் மட்டும் தாக்கும் சக்தி வாய்ந்த இந்த விமானங்கள் சீனாவிலிருந்தும், இத்தாலியிலிருந்தும் வந்தவை என்றபோதும், அவற்றின் இலக்குகள் என்னவோ அவ்வளவு துல்லியமாக இருப்பதாகத் தோன்றவில்லை. கொழும்புப் பத்திரிகைகள் அதைச் சொல்லாவிட்டாலும் அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் அப்படித்தான் தெரிவிக்கின்றன. இணுவில் ஆஸ்பத்திரி, துர்க்கையம்மன் கோவில், அநாதைகள் மடம் போன்றவை தாக்கப்பட்டது இதைத்தான் காட்டுகிறது.

"இல்லை, அதை எப்படிச் சொல்லுறது? உனக்கு எப்படித் தெரியும் இவை இலக்கு மாறியதாக? ஆஸ்பத்திரியும், கோவிலும் அவர்களின் இலக்காக ஏன் இருந்திருக்கக் கூடாது? "

இந்தக் கேள்வி நியாயமானதுதான். ஆனால் புலிகளை அழிப்பதல்ல , வடக்கு, கிழக்கு மக்களின் கொழும்பிற்கான பிரயாண வசதியை செய்து கொடுப்பதே எமது நோக்கம் என்று இராணுவம் தெரிவித்துள்ளது என்ற செய்திகளைப் படித்துவிட்டு அப்படிக் கருதமுடியுமா என்ன?




எப்படியோ புலிகள் ` பரந்துபட்ட மக்களை அணிதிரட்டி மக்கள் யுத்தம் ` ஒன்றை உருவாக்கி வருவதாகவும், அதற்குப் பெருமளவு மக்கள்` சேர்ந்து வருவதாகவும்`, இராணுவம் ஊரியான் பாதையையும் மூடிவிட்டது இதற்கு வசதியாகிவிட்டதாகவும் தெரிகிறது. மக்களின் பங்களிப்பில்தான் எதிரியை விரட்ட முடியுமாம்.

யாழ்ப்பாண மக்கள் மீது புலிக்கும், சிங்கத்திற்கும் திடீரென வந்துள்ள கரிசனையைப் பார்க்கும்போது உடம்பு புல்லரிக்கின்றது.

"புல்லரிக்கின்றதா? புலியும், சிங்கமும் தமிழ் மக்களைத் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொண்டால்தான் தெரியும் உன்ரை புல்லரிப்பு. முழுதும் எனக்குத்தான் என்று அவை சண்டை பிடிக்கிற வரைக்கும்தான் நிம்மதி. விளங்குகிறதா?"

எனக்கு இந்தக் கேள்விக்குப் பதில் தெரியவில்லை.

கொழும்பில் கடந்த யூன் முதலாம் திகதி `சனகோஷய` என்று ஒரு போராட்டத்தை எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்திருந்தன. `இரைச்சல் போராட்டம்` என்று வீரகேசரி இதை மொழிபெயர்த்தது. வழமைபோல ஒரு மொழிபெயர்ப்புத்தான். போகட்டும். இந்தப் போராட்டம் மாபெரும் வெற்றி அளித்ததாகத் தெரிகிறது.

பாராளுமன்றத்தில் `இரைவது` போதாதென்று இப்போது பாதைக்கு வந்துவிட்டார்கள் இவர்கள் என்று யூ.என்.பி முணுமுணுத்தது. ஆனால் பிரஜைகளுக்கு வந்த சந்தேகம் இதுதான். 1/2 மணி நேரம் `இரைவது` என்ற ஒரு போராட்டத்தைத் தவிர இந்த எதிர்க்கட்சிகளுக்கு வேறு எந்த உருப்படியான யோசனையும் வரவில்லையோ என்பதே.

"ஏன் இல்லை. கந்தளம ஹோட்டல் இல்லையா? கந்தளம ஹோட்டல் மூலம் தொண்டமான் சிங்களக் கலாச்சாரத்தை அழித்து மலையகத்தில் தமிழ் அரசு ஒன்றை உருவாக்க நினைக்கிறார் என்று போராடுகிறார்களே" என்றார் நண்பர்.

என்னவோ ஒன்றுமட்டும் தெரிகிறது. யூ.என்.பியை அழிய விடாமல் பாதுகாப்பதில் இந்த எதிர்க்கட்சிகளுக்கு வேறு இணையே இல்லை.

- பிரஜைகள் (ஈழம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடெங்கே?



ஜேர்மனியத் தெருக்களில் சுமக்க முடியாமல் கைக் குழந்தையைச் சுமந்துகொண்டு பிச்சை கேட்கும் இந்தச் சிறுவன் யார்?

மழை பெய்த ஈரத் தெருவில் உட்கார்ந்து குழந்தையை மடியில் படுக்க வைத்துக் கொண்டு கை நீட்டி பிச்சை கேட்கும் இந்தத் தாய் யார்?

பொருளாதாரத்தில் பலமாகிக் கொண்டு வரும் ஜேர்மனியில் பிச்சை கேட்கும் இவர்கள் ஜேர்மன் மக்கள்தானா?

இல்லை! இவர்கள்தான் றோமா, ஸிந்தி மக்கள்.

சித்திரவதை, புறக்கணிப்பு, அவமானம்,, சிறைச்சாலைகளில் கொலை, விரட்டியடிப்பு... இன்னோரன்ன கொடுமைகளுக்கு பல ஆண்டுகளாக ஆளாகிக் கொண்டிருக்கும் றோமா, ஸிந்தி மக்கள் தான் இவர்கள். இன்றும் கூட நீதியற்ற முறையிலும், இழிவாகவுமே இவர்கள் நடத்தப்பட்டு வருகிறார்கள்.

இவர்களை "ஸிகொய்னர்" (Zigeuner-நாடோடிகள்) என்றே பல ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்றுவரை அழைக்கிறார்கள். "ஸிகொய்னர்" என்பது ஜேர்மன் மொழியில் இழிவானதைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

இன்று மேற்கு ஜேர்மனில் சுமார் 40 ஆயிரம் ஜேர்மனிய றோமா, ஸிந்தி மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் நீண்டகாலம் இங்கு வசித்து இவர்களனைவில் "ஜேர்மனியர்கள்" ஆகியுள்ளனர்.

றோமா, ஸிந்தி மக்களின் தாய்நாடு (வட) இந்தியா என்று நம்பப்படுகிறது. ஏன் இவர்கள் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன் இந்தியாவை விட்டு வெளியேறினார்கள் அல்லது வெளியேற்றப்பட்டார்கள் என்பது இன்று வரை தெரியவராத செய்தியாகவே உள்ளது. ஜேர்மனிய ஸிந்தி மக்கள் சுமார் 600 வருடங்களாக மத்திய ஐரோப்பாவில் வாழ்கிறார்கள் என்று அறியப்பட்டுள்ளது. இவர்கள் அடுத்ததாக பல்கன் நாடுகளுக்கு இடம்பெயர்ந்தார்கள்.

ஸிந்தி, றோமா மக்களின் தாய்மொழி `றோமனல்` என்பதாகும். இம் மொழி இந்திய சமஸ்கிருதத்துடன் உறவுடையது. காலங்கள் போகையில் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்த றோமா, ஸிந்தி மக்கள் வேறுபட்ட `றோமனல்` மொழியைப் பேசலானார்கள். அத்துடன் தாங்கள் வாழ்ந்த அந்தந்த நாட்டு மொழியிலுள்ள சில சொற்களையும் தமது மொழியில் சேர்த்துக் கொண்டார்கள்.

முதன் முதலில் மத்திய ஐரோப்பாவுக்கு வந்த ஸிந்தி மக்கள் எகிப்திலிருந்து வந்த தல யாத்திரிகர்களாகவே கருதப்பட்டனர். பின்னர் இவர்கள் ஏமாற்றுக்காரர்கள், மாயாஜாலக்காரர்கள் என்ற கருத்து உருவாகி வளர்ந்தது. இக் கருத்தினடிப்படையில் எழுந்த வெறுப்பினால் 1449ஆம் ஆண்டு பிராங்பேர்ட்டில் (Frankfurt) வாழ்ந்த ஸிந்தி மக்கள் துரத்தியடிக்கப்பட்டனர். ஏனைய பகுதிகளில் வாழ்ந்தவர்கள் எந்தவித உரிமையும், பாதுகாப்பும் பெறமுடியாதவர்கள் என பிரகடனப் படுத்தப்பட்டார்கள். அத்துடன் இம் மக்களின் வாழ்க்கை முறையையும், "விளங்கமுடியாத" மொழியையும் ஒப்பிட்டு இவர்கள் துருக்கிய உளவாளிகளாகவும் கருதப்பட்டார்கள்.

1551ஆம் ஆண்டு காலப் பகுதியில் துருக்கியர் மீதிருந்த பயத்தினால் ஒக்ஸ்பேர்க் (Augsburg) பாராளுமன்றம் 3 மாதத்திற்குள் ஸிந்தி, றோமா மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி விட வேண்டுமென உத்தரவிட்டது.

16ஆம் நூற்றாண்டு மத்தியில் பிரஜாவுரிமை உள்ள எவரும் தங்கள் இடங்களுக்கு, சொத்துகளுக்கு அண்மையில் உள்ள ஸிந்தி, றோமா மக்களைக் கொல்லலாம் என கொடூர அனுமதி வழங்கப்பட்டது. இக் கொலைகளுக்கு தண்டனை வழங்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த நூற்றாண்டு காலத்திலும் ஸிந்தி, றோமா, மக்களின் நிலமையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. விரும்பத் தகாதவர்களாய் நடாத்தப்பட்டார்கள். அழிக்கப்பட்டார்கள்.

## *செத்துவிடு அல்லது கொன்றுவிடுவோம்*

18ஆம் நூற்றாண்டில் பிறப்பிக்கப்பட்ட பிரகடனத்தால் அக் காலப்பகுதியில் ஜேர்மனியில் வாழ்ந்த ஸிந்தி மக்கள் வேட்டையாடப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டார்கள். பத்திரிகைகள் எல்லாம் ஸிந்தி மக்கள் செய்யாத குற்றங்களை செய்ததாக எழுதியதிலிருந்து ஸிந்தியினர் மனிதர்களைப் பிடித்துச் சாப்பிடும் நரமாமிசக் கும்பல் என்று சித்தரிப்பது வரை இம் மக்கள் கொல்லப்படுவதற்குத் தூண்டுகோலாக இருந்தன.

1725இில் பிறீடிறிக் வில்ஹெல்ம் (Friedrich Wilhelm I) என்ற அரசன் விசாரணைகள் எதுவுமின்றி 18 வயதிற்கு மேற்பட்ட எல்லா ஆண், பெண் ஸிந்தி மக்களையும் தூக்கிலிடும்படி உத்தரவிட்டான். அத்துடன் ஸிந்தி மக்கள் காது வெட்டப்படுதல், முக்கிய உறுப்புகளில் தீ மூட்டப்படுதல், உடம்பில் கூரான ஆயுதங்களால் கீறப்படுதல்... போன்ற சித்திரவதைகளுக்கு ஆளானார்கள். இவர்களைச் சுட்டுக் கொல்லும் கொலையாளிகளுக்கு பரிசுகளும், பாராட்டுதல்களும் வழங்கப்பட்டன.



"என்ன ஜேர்மனிக்கு வந்தாப் பிறகும் கையில சங்கிலியோட திரியிறீங்க?"

"ஊரில வதைமுகாமுக்குப் பொறுப்பாயிருந்த பழக்கதோஷம்"

- இன்னன்னா



மத்திய ஐரோப்பாவில் நிரந்தரமாகிய முதலாவது ஸிந்தி மக்கள் தங்கள் இன அடையாளங்கள் அழித்துக் கொள்வதற்கு பலவந்தப்படுத்தப்பட்டார்களா என்பது அறியப்படவில்லை. 18ஆம் நூற்றாண்டில் தாங்கள் வாழ்ந்த பெரும்பான்மைச் சமூகத்தின் வாழ்க்கை முறைகளை ஸிந்தி மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

1726ஆம் ஆண்டில் கிறாவ் வொன் விற்கென்ஸ்ரைன் (Graf von Wittgenstein) என்பவர் ஒரு கூட்டம் ஸிந்தி மக்களை தனது பகுதிகளில் குடியமர்த்த அனுமதித்தாலும் 12 வருடங்களின் பின் அம் மக்கள் திரும்பவும் விரட்டப்பட்டார்கள். மறியா தெரஸியா (Maria Theresia) என்பவனும், யோஸப்2 (Joseph2) என்பவனும் ஸிந்தி, றோமா மக்களை நிரந்தர பண்ணை அடிமைகளாக்க விரும்பினார்கள்.

நூறன்பேர்க்கிற்கும் (Nürnburg) அதன் சுற்று வட்டாரத்திற்குமான புரட்டஸ்தாந்து திருச்சபை 1828ஆம் ஆண்டு ஒரு ஆசிரியரை ஏற்பாடு செய்து பிறிடிறிக்ஸ் லோறா (Friedrichslohra) என்ற இடத்தில் வாழ்ந்த ஸிந்தி மக்களை பெரும்பான்மைச் சமூகத்தின் வாழ்க்கை முறைகளுக்குப் பழக்கும்படி பணித்தது. 1835இல் இந்த இடத்தில் 80-100 பேரே வாழ்ந்தார்கள். இத் திட்டம் அங்கு வாழ்ந்த பெரும்பான்மைச் சமூகத்தின் எதிர்ப்பால் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. சிறிது காலத்தின் பின் மக்தபேக் (Magdeburg) அரசு ஸிந்தி மக்களில் வளர்ந்தவர்களை வேலைத் தளங்களிலும், குழந்தைகளை பராமரிப்பு நிலையங்களிலும் தங்க வைத்தது.

19ஆம் நூற்றாண்டு சட்டப் புத்தகங்களில் "ஸிகொய்னர்" என்பதற்குப் பதிலாக பிச்சைக்காரரர், நாடோடிகள், நாடற்றவர்கள் என்றே ஸிந்தி மக்கள் குறிப்பிடப்பட்டனர். அத்துடன் பெரும்பாலான வெளியீடுகள் ஸிந்தி மக்களையும், அவர்களது வாழ்க்கையையும் எதிர்த்துத் தீவிர பிரச்சாரங்களை மேற்கொண்டன.

இக் காலகட்டத்தில் ஸிந்தி மக்கள் "உள்நாட்டு ஸிகொய்னர்", "வெளிநாட்டு ஸிகொய்னர்" என்று பிரிக்கப்பட்டனர். வெளிநாட்டவர் என்று பிரிக்கப்பட்டவர்கள் உடனடியாக அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த ந்த நாடுகளுக்கே அனுப்பப்பட்டார்கள். உள்நாட்டவர்கள் என்று பிரிக்கப்பட்டவர்கள் சில சுற்றுவட்டாரங்களில் இருக்க அனுமதிக்கப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொல்லப்பட்டறை வேலை, வீடு திருத்தி விற்பது, பழைய பொருட்களை திருத்தி விற்பது, கைத்தொழில் போன்ற வேலைகள் செய்ய அவர்களுக்கு விசேட அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

1845ஆம் ஆண்டில் வெளிவந்த மன்ஹைமர் (Manheimer) என்ற பத்திரிகையின் 115ஆவது வெளியீட்டில் ஸிந்தியும், றோமாவும் தங்களை விற்றே பொருட்களை வாங்குகிறார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

ஸிந்தி, றோமா மக்களை நடாத்திய முறை ஜேர்மனியின் பழைய ஆபிரிக்க காலனித்துவ முறையைச் சேர்ந்தது என்று ஜோஅசிம் ஸிற்லோமன் (Joachim Sitlohman) என்ற எழுத்தாளர் குறிப்பிடுகிறார். மக்களை அடிமையாகக் கொண்டுவந்து வேலை வாங்கப்பட்டதென்றும், ஒருநாளைக்கு ஒருநேரச் சாப்பாடு மட்டுமே கொடுக்கப்பட்டதென்றும், நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் வேலை செய்தே ஆக வேண்டும் என்றும், வேலை செய்யாவிட்டால் கடும் தண்டனை என்றும் ஆபிரிக்க அடிமைகள் நடத்தப்பட்டதைப் போலவே ஸிந்தி, றோமா மக்களும் பயன்படுத்தப்பட்டார்கள் என அவர் எழுதுகிறார்.

## திட்டமிட்ட அழிப்பு

முஞ்சனில் "ஸிகொய்னர் நிலையம்" அமைக்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கை விபரங்கள் பதியப்பட்டு, படங்கள் எடுக்கப்பட்டு, விரலடையாளங்களும் பதியப்பட்டன. 1926இல் எடுக்கப்பட்ட இவ் விபரங்களின்படி 14 ஆயிரம் பேர் பதியப்பட்டிருந்தனர். இந்த விபரங்களின் உதவியுடன் 1933இல் ஸிந்தி, றோமாவினரும், அவர்களது கலப்புகளும் கருத்தரிக்க முடியாதபடி மலடாக்கப்பட்டார்கள். 1935இல் ஸிந்தி, றோமா, ஆரிய இனத்தவர்கள் தங்களுக்கிடையே திருமணம் செய்துகொள்வது தடை செய்யப்பட்டது. அத்துடன் இவர்களின் பிரஜாவுரிமையும் பறிக்கப்பட்டது. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக 36ஆம் ஆண்டு றொபேட் றிக்ரர் என்பவன் தலைமையில் "இன அழிப்பு சுகாதார நிலையம்" திறக்கப்பட்டது. 1938இல் ஹைறன்றிச் ஹிம்லெர் (Heinrich Himmler) என்பவன் "ஸிகொய்னர் எதிர்ப்பு அலுவலகம்" என்பதை ஆரம்பித்தான். இந்த 2 அலுவலகங்களும் மொத்த ஸிந்தி, றோமா மக்களையும் பூண்டோடு அழிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டன.

இக் காலகட்டங்களில் ஸிந்தி, றோமா மக்கள் கீழ்த்தரமான இனக்கலப்பைச் சேர்ந்தவர்கள் என்றும், தீய பழக்க வழக்கங்களை உடையவர்கள் என்றும் அவதூறுப் பிரச்சாரங்கள் இன ஆராய்ச்சியாளர்களால் பரப்பப்பட்டன.

1939இல் கொண்டுவரப்பட்ட சட்டத்தில், அச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதிலிருந்து ஸிந்தி, றோமா என்ற இனம் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், தங்கள் இடங்களைவிட்டு அவர்கள் உடனடியாக வெளியேறிவிட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. கிறிமினல் பொலிஸாரால் கூட்டு முகாம்கள் அமைக்கப்பட்டன.

1940இல் றோமா, ஸிந்தி மக்கள் போலந்துக்கு நாடுகடத்தப்பட்டதுடன் மிகப் பெரியளவிலான நாடுகடத்தல் ஆரம்பமாகியது. 1942இல் மிகுதியாக இருந்த 10 ஆயிரம் பேரும் நாடுகடத்தப்பட்டார்கள். 1943இலிருந்து "ஸிகொய்னர் முகாம்" விடுதிகளுக்கு பல குடும்பங்கள் அனுப்பப்பட்டன.

1944இல் "ஸிகொய்னர் முகாம்கள்" மூடப்பட்டு, அங்கிருந்த 6 ஆயிரம் ஸிந்தி, றோமா மக்களில் 3 ஆயிரம் பேர் நாடுகடத்தப்பட்டார்கள். வேலைக்காக வைத்திருக்கப்பட்ட 3 ஆயிரம் ஸிந்தி, றோமா மக்களும் , இவர்களுக்கு மருத்துவம் செய்த வைத்தியரும் அதே ஆண்டு ஒகஸ்ற் 3ஆம் திகதி இரவு கொல்லப்பட்டார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் கொல்லப்படுவதற்கு முன் ஸீமன்ஸ்(Siemens), டெய்ம்லர்-பென்ஸ்(Daimler- Benz), ஏ.ஈ.ஜி.(AEG), பி.எம்.வே (BMW), ஐ.ஜி-கலர்(IG Colour) ... போன்ற பிரம்மாண்டமான தொழிற்சாலைகளில் சம்பளம், சாப்பாடு எதுவுமின்றி கட்டாயமாக வேலை வாங்கப்பட்டார்கள்.

நாஸிகளால் கைப்பற்றப்பட்ட ஐரோப்பிய பகுதிகளில் சுமார் அரை மில்லியன் றோமா, சிந்தி மக்கள் கோரமாகக் கொல்லப்பட்டனர். ஒவ்வொரு குடும்பம் குடும்பமாகப் பிடிக்கப்பட்டு நாஸிகளின் சிறைக்கூடங்களில் வைத்துக் கொல்லப்பட்டார்கள்.

நடந்த கொலைகள் இனவாத அடிப்படையில் நடக்கவில்லை என்றும், அவர்களின் குற்றச் செயல்களுக்காகத்தான் இவை மேற்கொள்ளப்பட்டன என்றும் பின்னர் இக் கொலைகளுக்கு காரணங்கள் கூறப்பட்டன.

1956இல் தேசிய நீதிமன்றத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் ஸிந்தி, றோமா மக்கள் கிறிமினல்கள், மற்றவர்களின் சொத்துகளில் கண் வைத்திருப்பவர்கள், மற்றவர்களுடையதை தங்களுக்கு உரிமையாக்குபவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டது.

*இன்ய*

ஸ்பீகல் (Spigel) சஞ்சிகை சில காலங்களுக்கு முன்பு எடுத்த கருத்தெடுப்பின்படி இன்றும் கூட ஸிந்தி, றோமா மக்களை ஜேர்மனியர்கள் இழிவாகவே கருதுகிறார்கள். தற்போது எழுந்துள்ள வீடில்லாப் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றால் ஸிந்தி, றோமா மக்கள் புறக்கணிக்கப்படுவது தொடர்கிறது. கள்ளர்கள், ஊத்தைகள், நாடோடிகள் என்று இழிவுபடுத்துவதும் தொடர்கிறது. அத்துடன் இவர்களை இங்கே தங்கவிடாமல் ருமேனியா, யூகோஸ்லாவிய நாடுகளுக்குத் தொடர்ச்சியாக விரட்டி வருகிறார்கள்.

பல நூற்றாண்டுகளாக அழிவை மட்டுமே சந்தித்துக் கொண்டிருக்கும் இந்த மக்கள் இன்றும் தெருக்களில் நின்று பிச்சைகூட எடுக்க முடியாதவர்களாக துரத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களும் மற்ற இனத்தவர்களைப் போல நிரந்தர வாழ்க்கையை வாழ்வது எப்போது?

*( தகவல்கள் Heidelberg லிருந்து வெளியாகும் Brennpunkte என்ற சஞ்சிகையிலிருந்து பெறப்பட்டன)*

- பு.நிரஞ்சன்



# இன்றைய நிகழ்வுகளுக்கு...

மரணக் குவியல்களுக்கிடையில்
"மானிடம்" இன்று
வாழ்ந்து கொண்டிருக்கும்.

பழமை தந்த
வசந்தங்களிடையே
இன்று தேசம்
மயானமாய்
மாறிப் போயிருக்கும்.

காகம் கரைந்தும்
சேவல் கூவியும்
பொழுது விடிந்த
கதை போய்...
துப்பாக்கி வெடியோசை
துயில் எழுப்பி
உயிரைச் சுமந்த
சதையாக எம்மை
தினமும் ஓட வைக்கும்.

உடைந்த சுவர்கள்
அழிந்த மனைகள்
கணவனை, மனைவியை
தாயை , தந்தையை
கையை, காலை
கண்ணை இழந்த
அரை மனிதர்களுள்
வாழ்வைத் தேடும் படலம்
தினமும் நடக்கும்.

பசி பட்டினி
சதையைத் தின்று
உயிரை அழிக்கும்
"விடுதலைப்" போராட்டங்கள்
மனிதனை அடிமைப்படுத்தும்.

சுதந்திரம் தா! என
சினந்து எழுந்த மக்கள்
இன்று
மௌனிகளாய் இருப்பர்.

இனப் பிசாசுகள்
பயங்கரமாய்
உலாவித் திரியும்.
கழுத்தை நெரி
நெஞ்சைப் பிள
தலையை சிதையென
துப்பாக்கிகள்
தேடி அலையும்.



பகலிலும்
என் தேசம்
இருண்டு கிடக்கும்.

காகங்கள்
மனிதச் சதைகளை
கொத்தித் தின்னும்.

நான் முழுதும்
ஆயுள் முழுதும்
சுய பிரக்ஞையின்றி
மனிதர்கள்
அலைந்து திரிவர்.

*

யெம்.பௌஸர் (ஈழம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவான்களுக்கு ஓர் கடிதம்

பரதேசியின் பார்வையில் தேசத்தின் குறிப்புகளுக்கு நீங்கள் கொடுத்த விளக்கங்கள் எமக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளதுடன் எமது கடந்தகால அரசியல் கருத்துப் பரிமாறல்களை மீண்டும் நினைவுபடுத்த வேண்டிய தேவையை உணர்த்தி நிற்கின்றது.

1. கடலோடிகளுக்கும் புலிகள் தேசிய சக்திகள்தானா? என்ற கேள்விக்கு தாங்களது இரண்டு பார்வைகளில் ஒன்றாகப் புலிகளை அழிப்பதற்கு இந்திய, இலங்கை அரசிற்கோ, ஏனைய இயக்கங்களுக்கோ உரிமையில்லை என்ற கருத்துப் பற்றி...

புலிகளை அழிப்பதற்கு இந்திய, இலங்கை அரசிற்கு உரிமையில்லை என்பது உண்மையே. ஆனால் இயக்கங்களைப் பொறுத்தவரை கடந்த காலத்தில் போராளிகள் விடுதலை உணர்வுடன் வளர்க்கப்படுவதற்கு மாறாக இயக்கங்களிடையே போட்டி, பொறாமை, பழிவாங்கல் போன்றவற்றிற்கூடாகவே வளர்த்தெடுக்கப்பட்டார்கள். இதன் வளர்ச்சிப்போக்கானது 'நீ பெரிதா, நான் பெரிதா' என்ற தெருச்சண்டையில் இறக்கிவிட்டது. இந்தத் தெருச்சண்டையில் முன்னணித் 'தெருச்சண்டியனாக' இன்றுவரை புலி இருந்து வருகிறது. புலிகளை மட்டுமல்ல, எந்த இயக்கத் தலைமைக்கும் இயக்கத்திலுள்ள போராளிகளைக் கொல்ல உரிமையில்லை. எந்த உரிமையில் புலிகள் ஏனைய இயக்கப் போராளிகளை அழித்து



வருகிறார்கள் என்று சற்றுக் கூற முடியுமா? இந்த இயக்கத் தலைமைகளின் தொடர்ச்சியான பழிவாங்கல்கள் அநியாயமாக எத்தனை விடுதலை உணர்வு கொண்ட போராளிகளையும், எமது வாழ்வையும் களவாடிக் கொண்டிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எந்த இயக்கத்தை எடுத்துக் கொண்டாலும் அதிலுள்ள போராளிகளின் மதிப்பீடு அவசியம் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். இயக்கங்களின் தோற்றம், செயற்பாடு, வளர்ச்சி என்பவற்றைக் கணக்கிலெடுக்காது பயங்கரக் கனவு கண்டவன் திடுக்கிட்டு எழும்பி அழுவதுபோல் மொட்டையாக புலிகளை அழிக்க எந்த இயக்கத்திற்கும் உரிமையில்லை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இரண்டாவது பார்வையில் நீங்கள் கொடுத்த தரவுகள் புலிகளை மாபியாக் கும்பலாக இனங்காட்டுகிறதேயன்றி தரகு முதலாளிகளாகக்கூட இனங்காட்டவில்லை. பிரஜைகளின் மதிப்பீடு சம்பந்தமான தரவுகளையும், புலிகள் தேசிய சக்திகளா என்ற சலீமின் கட்டுரை சம்பந்தமான தரவுகளையும், தாங்களது தரவுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவும். புலி இன்றும் நிலைகொண்டிருப்பதற்கான காரணமாக இலங்கையரசின் தொடர்ச்சியான ஒடுக்குமுறையும், ஒடுக்குமுறைக்கெதிரான மாற்று ஸ்தாபனமற்ற தன்மையும், புலிகள் மீதான மக்கள் கொண்டுள்ள அச்ச உணர்வும்தான் என நாம் கருதுகிறோம். இதனால்தான் ' என்ன இருந்தாலும்' (கவனிக்க!) அவங்கள்தான் நிண்டு போராடுறாங்கள் என்ற கருத்து எம் மத்தியில் நிலவுகிறது. இன்றைய யுத்தம் தடுப்பு யுத்தமானது என்றோ, புலிகள் தேசிய சக்திகள்தான் என்றோ, புலிகளின் நலனுடன் மக்களின் நலன் பிணைந்திருக்கிறது என்றோ ஏற்றுக் கொள்பவர்கள் 'நிபந்தனையுடன் கூடிய' ஆதரவை புலிகளுக்கு வழங்க வேண்டும். ஆய்வுகள், நிலைப்பாடுகள் என்பன செயற்பாடுகளை வகுத்துக்கொள்வதற்கு என்ற அடிப்படையிலேயே இதைக் கூறுகிறோம். ஆனால் தங்களது தரவுகள்தான் தங்களது புலி பற்றிய பார்வையாயின் புலியை மாபியாவாக நீங்கள் கருதுவதுபோல நாம் கருதவில்லை. புலிப் போராளிகளின் தேசிய விடுதலை உணர்வை நாம் ஆதரிக்கின்றோம்.

2. புலி பற்றிய இந்த ஆய்வுகள் தேவைதானா? என்ற கருத்துப் பற்றி...

இன்றைய நிலையில் இலங்கையரசு-புலிகளைக் கணக்கிலெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்காத போராட்டம் இருக்கமுடியாது என்பது உண்மைதான். அரசியல் ரீதியான போராட்டத்தை வகுத்துக் கொள்வதற்கு நடைமுறையிலுள்ள அரசியற் சக்திகளின் மதிப்பீடு அவசியம் என்பது உண்மைதான். ஆனால் மதிப்பீடு செய்வதற்கான காலம், சூழ்நிலை என்பதையும் சேர்த்து மதிப்பிட வேண்டும் என நினைக்கின்றோம். போராட்டம் சம்பந்தமாக கடந்த காலங்களில் கட்டிய மனக்கோட்டைகளை இன்றும் கட்ட நாம் தயாராக இல்லை. அரசியல் ரீதியான போராட்டத்தை வகுத்துச் செல்வதற்கல்ல, அதற்கான ஜனநாயகச் சூழலை உருவாக்குவதற்கே எமது தலைமுறையை இழக்க வேண்டும். புலிகளிடம் பச்சையாகவே வெளிப்படும் தங்கள் வாக்குமூலத்தில் குறிப்பிட்ட அனைத்து அராஜகங்களுக்கெதிராகவும் போராட வேண்டும். அதற்காக ஐக்கியப்பட வேண்டும் என்று கருதுகிறோம்.


3. தங்களைத் துதிபாட மட்டுமே சுதந்திரம் என்று புலிகள் கூறுவதற்கும், புலிகளை எதிர்க்க மட்டுமே கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்துங்கள் என்று புலி எதிர்ப்பாளர்கள் கூறுவதற்கும் இடையில் எந்த வித்தியாசத்தையும் எம்மால் காணமுடியவில்லை என்ற கருத்துப் பற்றி...

புல்லரிக்குதய்யா! புலி எதிர்ப்பாளர்கள் என்று இதில் யாரைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்று எமக்கு விளங்கவில்லை. புலி எதிர்ப்பாளர்கள் முக்கியமாக 2 வகையாக உள்ளனர். ஒன்று, புலிகளை முழுமையாக எதிர்த்துக் கொண்டு அதற்கு மாற்றீடாக ஏனைய இயக்கங்களை ஆதரிப்பவர்கள். இரண்டாவது, புலிப் போராளிகளின் தியாகங்களுக்கு மதிப்பளித்து அதனையே விளம்பரமாக்கி எம்.ஜி.ஆர். ஆட்சி நடத்தும் புலித் தலைமையை எதிர்ப்பவர்கள். இன்று எந்தச் சக்தி ஆதிக்கத்திலுள்ளதோ, இன்று நாம் எவற்றுக்காகப் போராட வேண்டிய தேவையுள்ளதோ அவற்றுக்காக எமது பலத்தை ஒன்று குவிப்பது அவசியமானது. முக்கியமளிக்கப்பட வேண்டியது. இந்த அடிப்படையில் புலிகளின் பாசிசத்துக்கு எதிரான நடவடிக்கையில் எமது பலத்தை ஒன்றுகுவியுங்கள் என்ற எமது கருத்தை புலித் துதிபாடிகளின் கருத்துடனோ அல்லது புலியை எதிர்த்து ஏனைய இயக்கத்தை ஆதரிப்பவர்களின் கருத்துடனோ இணைப்பதன் நோக்கம் எமக்கு விளங்கவில்லை. அதுவுமின்றி புலிகளை எதிர்க்க மட்டுமே சுதந்திரத்தைப் பயன்படுத்துங்கள் என்ற கருத்தை இதுவரை துண்டிலில் பார்க்கவில்லை. நேரில் சொல்லியிருந்தால் எந்த வகை புலி எதிர்ப்பாளர்கள் என்பதை யோசிக்காமல் அல்லது அது பற்றித் தெரிவிக்காமல் 'வாக்குமூலத்துக்கு' பலம் சேர்ப்பது ஆரோக்கியமான அணுகுமுறையாகாது.

4. 87இல் புலி-இந்திய இராணுவ யுத்தத்தின்போதும், பின்னரும் புலிகளின் சந்தர்ப்பவாதத்தை இனங்காட்டும் அதேநேரம் புலிகளின் யுத்தத்தை ஆதரிக்காதது தவறான நிலைப்பாடாகும் என்ற கருத்தை நாம் ஏற்றுக்கொண்டோம் என்ற கருத்துப் பற்றி...

புலிகள்-இந்திய இராணுவ யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறும் வரை இந்த யுத்தத்தை ஆதரிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தியவர்கள் என்ற அடிப்படையில் நாம் ஆதரித்ததற்கான காரணங்களைத் தருகிறோம். இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடும் பொழுதே இந்தியாவின் உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டு கருத்துகளைப் பரிமாறினோம். எதிர்பார்த்தபடியே ஒப்பந்தமும், ஆக்கிரமிப்பும் நடைபெற்றது. இவ்வாக்கிரமிப்பானது எமது தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சிதைப்பதுடன், இச்சிதைவுகளினூடாக முளைவிடும் வர்க்க சக்திகளையும், முற்போக்குச் சக்திகளையும் அழித்தொழிப்பதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் இந்திய விரிவாதிக்க மேலாதிக்கமானது முன்

"சீனாவிடமிருந்து போர் விமானங்கள் வாங்கியுள்ளோம். செக்கோசெலவாக்கியாவிடமிருந்து டாங்கிகள் வாங்கியுள்ளோம். இத்தாலியிலிருந்து ஹெலி வாங்கியுள்ளோம். நாங்கள் சமாதானத்தைத்தான் விரும்புகிறோம் என்பதற்கு இதை விட வேறென்ன அத்தாட்சி வேண்டும் என்று கேட்கிறேன்"
— இன்னன்னா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாவது நிலைக்கு மாபெரும் தடைக்கல் என்பதையும் கவனத்திலெடுத்து இந்திய-புலி யுத்தத்தை ஆதரித்திருந்தோம். புலிகள் இந்திய மேலாதிக்கத்திற்கு எதிரானவர்கள் என்றோ, புலிகள் தேசிய சக்திகள் என்றோ இந்த யுத்தத்தை ஆதரிக்கவில்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். புலிகள் எந்த ஏகாதிபத்தியத்திற்கும் தமிழ்த் தேசிய இனத்தை அடகுவைக்கத் தயங்க மாட்டார்கள் என்பதையும் தெளிவாக முன்வைத்தே புலிப் போராளிகளின் இந்திய மேலாதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை ஆதரித்தோம். மூன்றாவது நிலைக்கான முதற்கட்டப் போராட்டமாகவே இதைக் கருதினோம். அத்துடன் புலித் தலைமையையும், புலிப் போராளிகளையும் பிரித்துப் பார்க்காமல் ஏனைய இயக்கங்களைப் போலவே புலிகள் மீது நீங்கள் வைத்த வக்கிரமான விமர்சனத்தை விமர்சித்து வந்தோம். இந்திய - புலி யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறிய பின்பும் கூட எமது கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் மறந்து இந்திய-புலி யுத்தத்தை ஆதரிக்காதது' தவறு என்பதை ஏற்றுக்கொண்டோம் என்பது 'வரையறுக்கப்பட்ட சுதந்திரத்தை' மறுதலித்து கருத்துச் சுதந்திரத்தை 'முழுமையாக' பயன்படுத்துவதில் தெரிகிறது. இவை யாவும் எமக்கு ஒன்றை மட்டும் உணர்த்தி நிற்கின்றது. அதாவது கடந்த கால வரலாறுகளிலிருந்து எந்த விதமான படிப்பினைகளையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதுதான். அண்மைக்காலமாக புலம்பெயர்ந்தவர்களின் படைப்புகளும், போக்குகளும் திசைமாறிச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. பிரஜைகள் உங்களைப் புளுக, நீங்கள் பிரஜைகளைப் புளுக (பக்.57) என பரஸ்பர முதுகு சொறியலும், 15 வயதில் ஞானப்பால் குடித்த புராணக் கதைகளும், சேறடிப்புகளுமாக எழுத்துகள் அமையாமல் ஆரோக்கியமானதாக அமைய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

- வி.நடராஜன்


---

முன்னட்டையில்....

*ஈழத்தில் நாளாந்த வாழ்வின் பாதிப்பில் எட்டே வயதான சிறுவன் சமரன் வரைந்தது.*
*கோஹ் சவர்லாண்ட் கிறைஸ் பகுதியில் ஈழவாலிபர் விளையாட்டுக் கழக ஆதரவில் யூன் மாதம் நடைபெற்ற சிறார்களுக்கான ஓவியப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றுக்கொண்ட படைப்பு.*



# வாசகர் கடிதங்கள்



தூண்டில். இரவல் தூண்டில்
நல்ல முயற்சி.

எப்போது கப்பல் வரும்,
அதில் கடிதங்கள், சஞ்சிகைகள்
வரும் என ஏங்கும் நிலை எமது
நிலை. அது வந்துவிட்டாலோ
பசித்தவனுக்கு எள்ளுப்பொரி
போல்தான்.

வெளிநாட்டு அரசியல்
குறிப்பாக ஜேர்மனியில்
நாஸிஸம் தலையெடுத்துவரும்
அபாயம், கள்ளர் கூட்டு
போன்றவை இருட்டில் என்ன
நடக்கின்றது என்பதை
அறியமுடியாத எமக்கு நல்ல
வாசிப்பு. அன்னிய ஆயுதங்கள்,
இறப்பின் எண்ணிக்கைதாம்
எமது பத்திரிகைகளுக்குத்
தெரிந்த செய்திகள்.

உலகுடன், உயிருடன்
அந்நியப்பட்ட வாழ்வு எம்
வாழ்வு. கதைக்க, எழுதப்
பயப்படுகின்றோம். எங்கள்
முகங்களை இழந்துவிட்டோம்.
முகம் இல்லாமல் இருப்பதுதான்
இன்று எம்மைக் காக்கும்.

எங்கள் பெயர் வெளியே
தெரிவதை நாம் விரும்பாத
காலம், சூழல்.

- .....ம். (ஈழம்)

தூண்டில் வாசக அன்பர்
மூலம் எமக்குக் கிடைத்தது.

இங்கு ஒருபக்கச் சார்பான அரசியல் வெளியீடுகளே வெளிவருகின்றன. பிறநாட்டு வெளியீடுகள் எமக்குக் கிடைப்பதில்லை. இங்குள்ள நிலை உங்களுக்குத் தெரிந்ததே.

- .....பி. (ஈழம்)

ஈழத்தின் அரசியல், இராணுவ நிகழ்வுக்குள் புலம்பெயர்ந்து, மேற்குலக நாடொன்றில் ஒரு காத்திரமான இலக்கியத் தளத்தை அமைத்துள்ளீர்கள் என்பது உங்கள் முயற்சியிலிருந்து தெரியவருகிறது. தூண்டில் சரியான ஒரு தீர்மானத்துடன் மூற்று முழுதான கண்ணோட்டத்தில் படைக்கப்படுகிறது என்பது ஆசிரியர் தலையங்கத்தில் புரிந்துவிடும்.

- .....ர். (ஈழம்)

பிரஜைகளின் குறிப்பு, அதன் பதில்கள் எல்லாம் அடிபட்டு, மோதுப்பட்டு ஒருபுதிய தீர்வைக் கொண்டுவரும் எனவும், கொண்டுவரவேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

இலங்கையிலிருந்து வரும் ஆக்கங்களில் பெண்களின் ஆக்கங்கள் வந்தால் மிகவும் நல்லது.

- றஞ்சி

உங்கள் பணி தொடர்க. பொறுப்புடன் தேடுக. புலிகளின் கோரப்பிடியில் சிக்கித் திணறும் மக்களுக்கு நேர்மையும், நெறிமுறைகளும் கொண்ட தலைமை தேவை. அதற்கு அத்திவாரமிடுக.

- .....ன். (ஈழம்)

நிமிர்ந்து நின்று நடுநிலை நாடி ஈழமக்கள் தேவைக்கு பேனாக்கத்திகளால் சிகிச்சை செய்யம் தூண்டிலின் முயற்சி தொடர வாழ்த்துகள். இதற்கு கை கொடுப்போம்.

- .....ன். (ஈழம்)



# வாசுதேவாவுடன் ஓர் நேர்காணல்

Utrechtலிருந்து Odijkeற்குச் செல்லும் சைக்கிள் பாதையில் நாங்கள். இரவு 10 மணியாகிவிட்டிருந்தும் இருளின் நிழல் அப்போதுதான் மெல்லக் கவிந்து கொண்டிருக்கிறது. அள்ளிக் கொண்டுவரும் காற்று அன்றைய வெயிலின் உக்கிரத்திற்கு அப்படி இதமாக இருந்தது. யாழ்ப்பாணத்து ஒழுங்கைக்குள் ஓடிக் கொண்டிருக்கும் சுகம். ஆனால், அனைத்தையும் மேவிக்கொண்டு ஈழத்து அரசியல் நிலை பற்றிய கரிசனை அனைவர் முகங்களிலும் சீரியஸ் முத்திரையைக் குத்தியிருக்கிறது.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை தென்னிலங்கையில் அங்கீகரித்த நவசமசமாஜக் கட்சியின் பிரதிநிதியாக இலங்கையின் தேசியப் பேரவையின் எதிர்க்கட்சி உறுப்பினராக இருக்கும் வாசுதேவ நாணயக்கார காலி றிச்மண்ட் கல்லூரியின் சிருஷ்டி. 1940களில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஆட்சி அதிகாரங்களுக்கு எதிராக ஒரு ஆசிரியராக இருந்துகொண்டு சாத்விக ரீதியிலான கிளர்ச்சியில் ஈடுபட்ட தஹநாயக்க தான் தனது இளமைக்கால அரசியல் ஈடுபாட்டின் ஆதர்சமையம் என்கிறார் வாசு.

1963இல் பிலிப் குணவர்த்தனா அவிசாவளைத் தொகுதியில் தேர்தலில் நின்றபோது அவருக்கான தேர்தல் பிரச்சாரத்தில் முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சாக வேலை பார்த்திருக்கிறார். பின்னர் 1970இல் கூட்டு முன்னணியின் ஆதரவில் கிரியல்ல தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1971இல் ஜே.வி.பி. கிளர்ச்சி வெடித்த போது கைது செய்யப்பட்ட இடதுசாரித் தீவிரவாதத் தலைவர்களில் வாசுவும் ஒருவர். "நான் அரசியல் போதம் பெற்ற மிகச் சிறந்த காலப்பகுதி இதுதான்" என்று தனது 14 மாதகாலச் சிறைவாசத்தை நினைவுகூர்கிறார் வாசு.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் அப்போது ஆட்சியைக் கைப்பற்றியிருந்த கூட்டு முன்னணி தொழிலாள வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தான் வலியுறுத்தியதாலும், இடதுசாரித் தலைமையானது பூர்சுவாக்களுடன் நடத்திய கூட்டு பேரத்தில் பூரணமாக குருட்டுத்தனமாக வழி நடத்தப்பட்டிருந்ததை எடுத்துக் காட்டியதாலும் தன்னை அதிதீவிரவாதி என்றும் fanatic என்றும்கூட அவர்கள் குறிப்பிட்டனர் என்கிறார்.

விக்கிரமபாகு கருணரட்ண, குமார் டேவிட், சாந்தா டி அல்விஸ் போன்றவர்களோடு இணைந்து தான் நவசமசமாஜக் கட்சியை உருவாக்கி இயங்க வேண்டிய நிலைமை அப்போது உருவாகியிருந்தது என்றும் ஒரு புதிய இடதுசாரிக் கட்சியின் தேவையை தனது கட்சி நிறைவேற்றியது என்றும் வாசு கூறுகிறார்.

தூண்டிலுக்கான பேட்டிக்காக எனது கேள்விகளை ஆரம்பிக்கிறேன்.

"தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைத் தென்னிலங்கையில் அங்கீகரித்த ஒரே ஒரு சிங்கள அரசியல் கட்சி என்று உங்களைக் கூறலாமா?" என்ற கேள்விக்கு கூர்மையாக என்னைப் பார்த்துவிட்டுக் கேட்டார்.

ந.ச.ச.கட்சியை ஒரு சிங்கள அரசியல் கட்சி என்று நான் குறிப்பிட்டது அவருக்கு அவ்வளவாக உவப்பாக இல்லை என்பதை அவரது பார்வை காட்டியது.

"நீங்கள் அப்படி எடுத்துக் கொள்வதாக இருந்தால் - அந்த



அர்த்தத்தில் நாங்கள்தான் இத்தகைய நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டுள்ள ஒரே ஒரு கட்சி" என்கிறார்.

*நான்: தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் உங்கள் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டிற்குத் தென்னிலங்கை மக்களின் மத்தியில் எந்தளவு செல்வாக்கு இருக்கிறது?*

வாசு: தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை விளக்கி மாத்தறை போன்ற இடங்களில் நாங்கள் நடத்தும் கூட்டங்களுக்கு ஐயாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து கேட்கிறார்கள். என்னை "சிங்களத் துரோகி" என்றெல்லாம் அவர்கள் தூற்றுவதில்லை. மக்கள் இனவாதிகள் அல்லர். பத்திரிகைகள், ரி.வி. போன்ற தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் நச்சுத்தனமான இனவாத அரசியலைப் பரப்பி வருகின்றன. எங்கள் கருத்துகளை மக்கள் மெல்ல மெல்லக் கேட்டு வருகிறார்கள். இதற்காக நாம் தொடர்ந்து உழைக்க வேண்டும். இது கஷ்டமான காரியம்தான். ஆனால் நான் நம்பிக்கையோடு இருக்கிறேன். ஐ.தே.க அரசுடன் ஹில்ரன் ஹோட்டலில் கைகோர்த்துக் கொண்டு திரிந்த தமிழீழ அரசியல் சக்திகள் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் தங்கள் கோரிக்கைகள் என்ன என்று எப்போதாவது விளங்கப்படுத்த முனைந்திருக்கிறார்களா? இனவெறி கொண்ட அரசு



*"மன்னா, நாங்கள் ஊழலிலும், கொள்ளையிலும் ஈடுபட்டு வருவதை மக்கள் கண்டுபிடித்து விட்டார்கள்"*

*"அதற்கேன் பதறுகிறீர் மந்திரியாரே. அரசவையிலுள்ள யாராவது சிலருக்கு மரண தண்டனை கொடுத்து விடுவோம்"*

*- இன்னன்னா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயார் என்று குரல் எழுப்புபவர்கள் சிங்களப் பொதுமக்கள் மத்தியில் தங்கள் கருத்துக்கு ஆதரவு திரட்ட வேண்டும். இவர்கள் அற்புதமான தீர்வுகளைத் தங்களின் சொந்தக் கனவுகளில் வைத்துக்கொண்டிருக்கக் கூடும். ஆனால் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமல்லவா?

*நான்: சிங்கள-தமிழ் இனப் பிரச்சினை பற்றிய அரசியல் கட்சிகளின் கூட்டு முன்னணி எப்போதுமே ஏன் தோல்வியில் முடிந்து போகிறது?*

வாசு: தமிழ் மக்களின் பிரச்சினை பற்றிய பாரதூரமான மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் எப்படி ஒருமித்த தீர்வை ஏற்படுத்த முடியும்? அடிப்படைப் பிரச்சினை தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையை அங்கீகரித்தல் பற்றியது. ஐ.தே.க. கட்சியோ, ஸ்ரீ.ல.சு. கட்சியோ கடந்த 50 ஆண்டு காலத்தில் தமிழர் உரிமைப் பிரச்சினையை அங்கீகரித்ததே கிடையாது. தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையை இவர்கள் அங்கீகரிக்காதது மட்டுமல்ல, அந்த சுயநிர்ணய உரிமையை மீறும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதில் தீவிரமாகவே இருந்து வந்திருக்கிறார்கள். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அவர்களின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு நல்ல உதாரணமாகும். அது மட்டுமல்ல, இன்றும் கூட இந்தக் குடியேற்ற உரிமை தங்களுக்கு உண்டு என்றும் அவர்கள் கூறி வருகிறார்கள். கொம்யூனிஸ்ட் கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகளும் ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்குவது பற்றியே பேசி வருகின்றன.

*நான்: வடக்கு, கிழக்கில் நடக்கும் யுத்தம் பற்றி சிங்கள மக்கள் என்ன நினைக்கிறார்கள்?*

வாசு: சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. சிங்கள மக்கள் இனப் போராட்டத்தை விரும்பவில்லை. தங்கள் பிள்ளைகள் ஒரு யுத்தத்தில் சென்று மரணிப்பதை அவர்கள் விரும்பவில்லை. மக்கள் அவர்கள் வடக்கில் இருந்தாலென்ன, தெற்கில் இருந்தாலென்ன சமாதானமாக, அமைதியாக வாழ்வதையே விரும்புகிறார்கள். தீவிர சிங்கள இனவாதம் பேசும் சக்திகள் மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து வருகின்றன. சிங்கள-பௌத்த கலாச்சாரத்தைத் தீவிரமாக வலியுறுத்தும் நளின் டி சில்வா என்ற கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர்





அண்மையில் அநுராதபுரத்தில் ஒரு கூட்டத்திற்கு உரையாற்றச் சென்றிருந்தபோது அங்கு 50 பேர் கூடச் சமூகமளித்திருக்கவில்லை. அதைப் பார்த்த நளின் டி சில்வா "சிங்கள சமூகத்தின் எதிர்காலம் எப்படித்தான் அமையப் போகிறதோ?" என்று ஆதங்கப்பட்டபோது கூட்டத்திலிருந்து ஒரு குரல் எழுந்ததாம் "நல்ல நேரம் கடவுள் காப்பாற்றினார்" என்று. இவர்களின் கருத்துகளைப் பத்திரிகைகள் பிரபல்யப்படுத்தக் கூடும். ஆனால் மக்கள் மத்தியில் இவர்களுக்குப் பெரிய செல்வாக்கு இருக்கிறது என்று சொல்ல முடியாது.

*நான்: ஐ.தே.க. ஆட்சி மக்கள் மத்தியில் இன்றும் செல்வாக்கோடு இருக்கிறதா?*

வாசு: இல்லை. மக்கள் ஐ.தே.க. வின் அராஜகங்களை எதிர்த்துப் போராட முன்வந்துவிட்டார்கள். மனித உரிமை மீறலை எதிர்த்து நாங்கள் மேற்கொண்ட "கதிர்காமத்தை நோக்கிய நடைபயணம்" எங்களுக்குப் பெரிய வெற்றியைத் தந்தது. 15 ஆயிரம் பேரில் ஆரம்பித்த இந்த யாத்திரை முடிவுறும்போது 1 இலட்சம் பேர் வரையில் கலந்து கொண்டிருந்தனர். தாய்லாந்து மக்கள் ஒரு சர்வாதிகாரியை மாற்றுவதற்கு அண்மையில் நடாத்திய போராட்டத்திலிருந்து இலங்கை மக்கள் தமது நம்பிக்கைக்கான பாடத்தைப் பெற்றுக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இன்றைய இலங்கையின் அரசியல் நிகழ்வுகள் புதிய positve directionsஐக் காட்டுகின்றன. சிறிது சிறிதாக மக்கள் பயத்தை விட்டு அரசை எதிர்க்க முன்வந்து கொண்டிருக்கின்றனர். அடிப்படை மனித உரிமைகளைத் தாம் இழந்து கொண்டிருப்பதை அவர்கள் விரும்பவில்லை. இந்த எதிர்பியக் கத்தில் பங்குகொள்ள சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் தங்களை இப்போது தயார்ப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். இந்த அரசைத் தூக்கியெறிந்தாக வேண்டும் - இப்போதே.

*நான்: வடக்கே சிங்கள இராணுவத்திற்கு எதிராக எதுவும் நடந்துவிட்டால் தெற்கில் முன்பு பெரும் பாதிப்புகள் இடம் பெற்றன. இப்போது அப்படி இல்லையே?*

வாசு: இன்று வடக்கு, கிழக்கில் இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்கள் அடிக்கடியும், பெரியளவிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்வுக்கும் எதிர்வினைகள் செயற்பட்டுக் கொண்டிருக்க முடியாது. அது என்றும் சாத்தியமானதுமல்ல.

*நான்: சிங்கள இராணுவத்தில் மக்கள் பெருந்தொகையாகப் போய்ச் சேர்வதற்கு தேசபக்தி தான் காரணமா?*

வாசு: பைத்தியமா? சாதாரண சிங்கள ஏழைக் குடும்பங்களைச் சேர்நதவர்கள்தான் தொழில் என்றும், குடும்பத்தை நடத்துவதற்கான ஊதியம் என்றும் போய்ச் சேருகிறார்கள். எந்த அமைச்சர்களுடைய குழந்தைகள் போர் முனையில் இருக்கிறார்கள்? போராட்டம் என்றும், விடுதலை என்றும் பேசும் எல்லா அரசியல்வாதிகளும் - அவர்கள் பாராளுமன்றத் தலைவர்களாக இருந்தாலென்ன, கெரில்லா இயக்கத் தலைவர்களாக இருந்தாலென்ன - தங்களைச் சுற்றிப் பாதுகாப்பு வலயங்களை அமைத்துக் கொண்டு பாதுகாப்பாக இருந்து கொள்வார்கள். ஒன்றுமறியாத அப்பாவிகள்தான் யுத்தத்தில் பலியாகிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் தேசிய வீரர்களாகவும், மாவீரர்களாகவும் கௌரவிக்கப்படுவார்கள். "தலைவர்கள்" என்று இருப்பவர்கள் பிறகு அரசியல் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். இது ஒரு நாடகம்.

*நான்: இலங்கையின் இன்றைய பொருளாதார நிலை பற்றி...?*



வாசு: கடுதாசிப்பெட்டியைப் போலச் சரிந்துவிட்டது. வேலையில்லாப் பிரச்சினை 20%க்கும் மேல் அதிகரித்துவிட்டது. பொதுமக்கள் தாங்க முடியாத பொருளாதாரக் கஷ்டங்களை அநுபவித்து வருகிறார்கள். உலக வங்கியின் விசுவாசமிக்க அடிமையாக ஐ.தே.க நடந்து வருகிறது. தோட்டங்களைத் தனியார் வசம் ஒப்படைக்கும் அரசாங்கத்தின் புதிய திட்டம் உலக வங்கியின் கட்டளைதான். ஐ.தே.க. வின் ஆட்சிக் காலத்தில் மக்கள் அநுபவித்து வரும் பொருளாதாரச் சுமைகள் மோசமாகிக் கொண்டு வருவதால் மக்கள் இந்த ஆட்சியை வெறுக்கிறார்கள் என்பதுதான் உண்மை.


*நான்: இன்று இலங்கையில் நிலவும் சீரழிவுக்கு யார் பொறுப்பு என்று நினைக்கின்றீர்கள்?*

வாசு: 2,500 வருடத்திற்கு மேற்பட்ட கலாச்சார பாரம்பரியம் கொண்ட தேசம், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் நிறைந்த தேசம் இப்படி ஒரு மோசமான நிலைமைக்கு வந்திருப்பது கவலைக்குரிய விஷயம். இன்று நாட்டில் நடைபெறும் அக்கிரமங்கள், அழிவுகள் அனைத்திற்கும் பிரேமதாசதான் பொறுப்பேற்க வேண்டும். 15,000க்கும் அதிகமான அரசியற் கைதிகளை பிரேமதாச சிறையில் வைத்திருக்கிறார். ஆயுதக் கடத்தலிலும், போதைவஸ்து வியாபாரத்திலும்

*"வீட்டை ஆர் வருகினம், போகினம் எண்டே தெரியாதோ?"*

*"ஆரேன் வருகினம் எண்டால் நான் உடனை குசினிக்குள்ளை போடுவன்"*

*- இன்னன்னா*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது ஆட்கள் ஈடுபடுவதாகத் தகவல்கள் உள்ளன. பெரும்பான்மையான சிங்கள மக்களைத் தமிழ் மக்களுக்கு எதிராகக் கொண்டு வந்துவிட்டதில் இவர் பெரும் பங்கு வகிக்கிறார். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எதனையும் செய்ய முடியாதளவிற்கு அவரது யதேச்சதிகாரம் பரந்து காணப்படுகிறது. எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் அரசுக்கு எதிராக வேண்டுமானால் சச்சரவை, சிறிய குழப்பத்தை ஏற்படுத்தலாமே தவிர இதற்கு மேலாக அங்கு எதுவும் செய்ய முடியாத நிலைதான் உள்ளது.


*நான்: நாளும் தொடரும் மனித உரிமை மீறல்களைப் பற்றி...?*

வாசு: தென்னிலங்கையில் 89, 90இல் நாட்டின் ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஜே.வி.பி. தீவிரவாத நடவடிக்கையில் இறங்கியபோது மனித உரிமைகள் மூர்க்கமாக மீறப்பட்டதை இலங்கை கண்டது. தங்களது அரசியற் கருத்துக்கு முரணான சகலரையும் ஈவிரக்கமின்றி இவர்கள் கொலை செய்தனர். கழுத்து, கையை வெட்டி அரசியல் எதிரிகளை ஜே.வி.பி. பழிவாங்கியது என்றால் இலங்கை அரசோ இதைவிடத் தீவிரமாக அரசியற் படுகொலைகளைச் செய்யவாரம்பித்தது. சிவில் உடையில் அரசின் அனுசரணையுடன் குண்டர்களின் அராஜகம் இலங்கையில் தலைவிரித்தாட ஆரம்பித்துவிட்டது. 89, 90இல் மட்டும் 60 ஆயிரம் பேர் காணாமற் போயிருக்கிறார்கள் என்றால் நிலைமை எவ்வளவு மோசமாயிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். உண்மையில் கடந்த காலங்களில் எத்தனை பேர் இறந்தார்கள், எத்தனை பேர் காணாமற் போனார்கள் என்று யாருக்கும் சரியாகத் தெரியாது. 1 இலட்சம் பேரோ அல்லது அதற்கும் மேலாக இருக்கலாம். ஜே.வி.பி. யின் அராஜகத்திற்கு மட்டுமல்ல, வடக்கே புலிகளின் அராஜகத்திற்கும் எமது இயக்கத்தைச் சேர்ந்த அண்ணாமலை போன்றோர் பலியாக நேர்ந்தது. இலங்கை அரசும் , ஜே.வி.பி. யும் , புலிகளும் Semi Facistsகள்தான்.

*நான்: தமிழர்களே நிராகரித்துவிட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ந.ச.ச.கட்சி ஏற்றுக்கொள்வது ஏன்?*

வாசு: இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வு, மலையகத் தமிழர்கள் பிரச்சினை பற்றிய அம்சங்களை நாங்





கள் வரவேற்கிறோம். இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டதில் இந்திய அரசின் தலையீட்டைத்தான் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மற்றப்படி அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையான அம்சங்கள் பலவற்றை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். தீவிர சிங்கள இனவாதிகள் இந்த ஒப்பந்தத்தை முற்றுமுழுதுமாக நிராகரித்த சூழ்நிலையில்தான் இந்த ஒப்பந்தத்தின் பல அம்சங்களை நாம் ஆதரித்தோம்.

*நான்: கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள சோசலிஸ நாடுகளின் வீழ்ச்சி இலங்கையின் இடதுசாரி அரசியலில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது?*

வாசு: ஐரோப்பியச் சூழல் வேறு, இலங்கை போன்ற நாடுகளின் சூழல் வேறு. எங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலில் இப்போது முனைப்பாக உள்ள அம்சங்கள் தேசியமும், ஜனநாயகமும் பற்றிய பிரச்சினைதான். ஐரோப்பாவின் சோசலிஸ நாடுகளின் வீழ்ச்சி எம்மை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளிலும் மார்க்ஸிய கட்சிகள் இன்று அரசியலில் வெற்றி பெற்று முன்னணியில் நிற்பதை நாம் காணலாம்.

*நான்: தயான் ஜயதிலக பற்றி...?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசு: அவர் ஒரு குத்துக்கரண புத்திஜீவி. அவ்வளவுதான். இப்போது பிரேமதாசவின் அந்தரங்க ஆலோசகராக இருந்து வருகிறார்.

*நான்: இனவாதத்திற்கு எதிரான கருத்துகளைப் பரப்புவதில் சிங்களப் பத்திரிகைகள் எந்தளவு முக்கியம் பெறுகின்றன?*

வாசு: "யுக்திய" என்ற் மேர்வினின் பத்திரிகை 30 ஆயிரம் பிரதிகள் வரை விற்பனையாகிறது. இதைவிட சுனில் மாத்தற பிரேமதிலக, வின்னி ஹெட்டிகொட ஆகிய பத்திரிகையாளர்கள் அண்மையில் ஆரம்பித்த சிங்கள மாதமிருமுறைப் பத்திரிகை 80 ஆயிரம் பிரதிகள் வரை விற்பனையாகிறது. சிங்களப் பெருந்தேசியவாதத்திற்கு எதிரான கருத்துகளைச் சிங்களக் கவிதைகள் பெருமளவில் சித்தரிக்கின்றன. சிங்கள நாடகங்கள், சினிமாக்களிலும்கூட இத்தகைய போக்கை அவதானிக்கலாம்.

*நான்: சிங்கள-தமிழ் இனப்பிரச்சினைக்கு நீங்கள் கூறும் தீர்வு என்ன?*

வாசு: தென்னிலங்கையில் சிங்கள இனவாத சக்திகளின் தளத்தைத் தகர்ப்பதுதான் அடிப்படையான அம்சம். தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளைச் சிங்களப் பொதுமக்களுக்கு விளங்கப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தெற்கே இனவாதத்திற்கு எதிராகப் போராடும் இடதுசாரிச் சக்திகளைத் தமிழ் மக்கள் பலப்படுத்தியாக வேண்டும்.

*நான்: வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?*

வாசு: எனக்கு இவர்களில் பெரிய நம்பிக்கை எதுவுமில்லை. இலங்கை நிலைமை பற்றி இவர்களுக்குப் பெரிய அக்கறை இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. Moral தொடர்பு அவ்வளவுதான். இவர்களில் பெரும்பாலோர் இலங்கைக்குத் திரும்பப் போவதில்லை. இந்த இனப்பிரச்சினை தீர்ந்தாக வேண்டிய தீவிரத்தைத் தென்னிலங்கை மக்கள் உணரும் அளவுக்கு ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் உணர்ந்திருக்கவில்லை. இவர்கள் வேறு உலகத்தில் வாழ்கிறார்கள்.

நெதர்லாந்தில் பேட்டி கண்டவர்: புனிதன்





சிறுகதை

# பலிக்கடாக்கள்

இறந்து விடுவது இயல்பு... அது முடிவானது. யாராலுமே தவிர்க்க முடியாதது. இது இயல்பாய் நடந்துவிட வேண்டுமா? எல்லோருக்கும் நிகழ்ந்து விடுவது போல உங்களுக்கும். நீங்கள் யார்? எல்லோரையும் போல சாதாரணமானவர்களா? நீங்கள் சாதாரணமாக இறந்து போகலாமா? இறந்தும் வாழ வேண்டும். இறப்பு. அதன் பின்பே உன்னத வாழ்க்கை. இறந்தும் நீங்கள் எல்லோரும் வாழ்வீர்கள்.

திடுக்கிட்டு விழித்தான் அவன். அன்று தத்துவ உரை நிகழ்த்திய `அவர்` தொடர்ந்தும் அவன் நினைவுகளிலும், கண்களை மூடக் கனவுகளிலுமாக `இறத்தல்` பற்றி விளக்கமளித்துக் கொண்டிருந்தார்.

பக்கத்தில் `அதனை` அணைத்தபடி படுத்திருந்தான் இரண்டு நாள் நண்பன். அவனும் வெறித்த பார்வையுடன் இருந்தான். நேற்று இவனுக்கு `உரை` நிகழ்த்தியிருப்பார்கள். பயிற்சி முடிந்து முகாமிற்கு வந்து இரண்டு நாட்களாகின்றது. யாருடனும் எதுவும் பேசாமல் இருந்தான். இவனும் இறப்பான். ஏன்... நானும். காவலுக்கு நிற்கும் அவனும் இறப்பான். நாங்கள் யாவரும் இறப்போம். கையில் அணைத்திருக்கும் `இது` சிலவேளை அவனை இறக்க வைக்கும். அல்லது அவன் கையில் உள்ளது என்னை....? எதற்கும் முடிந்த முடிபாய் கழுத்தில் தொங்குவது பல்லிடுக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிபட இறத்தல் எம்முடனே இருக்கின்றது.

`ஆலகால நஞ்சுண்ட கண்டன்` அவன் தாழ் தொழுது... எம் தாழும் தொழுவார்களா? அம்மா சாமிப் படத்திற்கு முன்னால் கால் கடுக்க நின்று கும்பிடுவது நினைவுகளில் வந்து போனது.

அம்மா... நினைவுகள் கண்களில் முட்ட தடவிப் பார்த்தான். ஆலகால நஞ்சு கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்தது.

பாற்கடல் கடைய விசம் வந்தது. நாம் எந்தக் கடல் கடைய எம் கழுத்தில் விசம்.. தெரியாமல் முழித்தான். அம்மா... அவன் அழுதிருப்பான். அவன் அழுவான். ஒப்பாரி வைத்து வாய்விட்டு அழுவான். அவளுக்கும் நான் செத்த பிள்ளையோ? என் இறப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பானோ?? எது???

சா... அது நிச்சயம். எப்படியாகிலும் சாக வேண்டும். சாவது இலட்சியம். விளக்கமளித்தவர் நினைவுகளில் வந்தார். அன்று தத்துவ உரை நிகழ்ந்தது. நிறுத்தி நிறுத்தி ஒவ்வொரு முகங்களையும் ஊடுருவி அவரின் ஞான உபதேச உரை நிகழ்ந்தது. அனைவரும் இறுகிப் போயிருந்தனர். மூச்சு விடாமல் இறப்பை விழுங்கி அணி அணியாக அமர்ந்திருந்தனர்.

போரிடு... சா.. போரிடு... சா.. அடிமனதில் எழுந்தது வாழ முடியாதா என. என்ன இவர்கள் எல்லோரையும் சா என்கிறார்கள். போரிடு.. வாழ்.. இது முடியர்தா? நீதிக்குச் சமர் செய்.. நிலைத்து வாழ்.. ஏன் இவ்வாறு நினைக்கிறார்களில்லை. எல்லாம் அழிவுதானோ? சகலமும் நிர்மூலமாகி எல்லாம் அழிவுதானோ??

வீட்டில் குண்டு விழ அப்பா சிதைந்து செத்துப் போனார். தொடர்ந்தும் வாழ்ந்திருக்க வேண்டியவர் அப்பா. இப்படித் திடீரெனச் செத்திருக்கக் கூடாது. அவர் வாழ்ந்திருக்க வேணும். நாளையும் குண்டு விழும். அடுத்த வீடு.. அதற்கடுத்த வீடு... ஊர் ஊராய் விழும். வாழ வேண்டியவர்கள் விழுவினம். சாகக் கூடாது. இனியது வாழ்வு. யாரும் சாகக் கூடாது. நாம் வாழ வேண்டும். வாழப் போரிட வேண்டும். எது அவனுக்கு ஞானமளித்தது வாழப் போரிடு போரிடு என.

அம்மா விடியத் தேடிப் பார்த்திருப்பாள். பாய் கூடச் சுருட்டாமல் விரிச்சபடி கிடந்ததைக் கண்ட அலறித் தேடியிருப்பாள். அப்பாவை நினைத்து அழ இதுவும் ஒரு சாட்டாகக் கிடைத்திருக்கும் அவளுக்கு.



போரிடப் பயிற்சி. முடியக் கழுத்தில் விசம். போரிட வேணும். சாகக் கூடாது. நீதிக்குப் போர் செய்து நிலைக்க வேண்டும். சாகக் கூடாது. ஏதோ அவனுள் பெரும் ஒலியாய் வாழ்.. வாழ்வு இனிது, வாழ் எனச் சொல்லியது. அவனுள் நம்பிக்கை. மூச்சு முழுக்க நம்பிக்கை. வாழ... நீடித்து வாழ. இது துரோகமாகி விடுமோ? வாழ நினைப்பது துரோகமாகுமோ?? இது அவர்களுக்குத் துரோகம். அவர்கள் சொல்வதற்கு எதிராய் நினைப்பது துரோகம். சிந்திப்பது துரோகம். `அவர்` நினைவுக்கு வர நெஞ்சில் பயம் அப்பியது.

உங்களுக்கு முன்பு தம் இன்னுயிரை ஈந்தவரை நினையுங்கள். அந்தக் கல்லறைகளை நினையுங்கள். அம் மாவீரர்களின் நினைவுகளைச் சுமந்து முன்னேறுங்கள்... அவர் நினைவு வர எரிச்சல் எரிச்சலாக வந்தது அவனுக்கு.

காவலுக்கு இவனது முறை வர நினைவுகளைத் துடைத்து எழுந்து சென்றான்.

கண்கள் எதிரிக்காய் விழித்திருக்க கை `அதனை` இறுகப் பற்றியிருந்தது. பயிற்சி முடிந்து `அதனை` இன்னும் போருக்காக இயக்கவில்லை அவன். போருக்குத் தகவல் வரக் காத்திருந்தது முகாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களம். நீண்டதாய் சதுப்பு நிலம். நாசியில் உப்புக் காற்றுக் கரித்தது. அமைதி குலைந்திருந்தது அதிகாலை. சூரியன் இன்னமும் கதிர் பரப்பவில்லை. குண்டுகளுக்கு பயந்திருந்தான் போலும்.

இறந்த வீரர்களை மீட்க ஒவ்வொரு காலடியையும் வைத்து இழுத்து அடியடியாய் நகர்ந்து கொண்டிருந்தது படை. விழும் ஒவ்வொருவரையும் மாவீரராய்க் கொண்டாட மீட்டு வரவேண்டி கட்டளையிடப்பட்டிருந்தது.

பாதுகாப்பு முகாமிற்குள் இருந்தான் எதிரி.

தடுப்புக்கு எதவுமின்றி பலிக்கடாக்களாய் சூழவும் இருந்தனர் இவர்கள்.

குண்டுகள் வெடித்து கந்தகப் புகை மண்ட கிடந்தன உடல்கள்.

மீட்புக்காக ஊர்ந்து சென்று கொண்டிருந்தான் இவன். பலிக்கடாக்கள். இவை பலிக்கடாக்கள். மீட்டு நாளை மாவீரர்களாக்கப் படும். கூடாது. இவை வைத்து வியாபாரம் கூடாது. மீட்கக் கூடாது. இவற்றை விளம்பரப் படுத்திக் கொண்டாடுவார்கள். நாளையும் இறத்தல் பற்றி 'உரை' நிகழ்த்த இப் 'பலிக்கடாக்கள்' போதும் அவர்களுக்கு. கூடாது. இவர்களை மீட்கக் கூடாது. தடவிப் பார்த்தான். ஆலகால நஞ்சு கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. எண்ணிக் கொண்டான்.

வாழ்வு இனியது.. இனியது வாழ்வு.. பல்லிடுக்கில் கடிபட அடங்கிப் போனது மூச்சு.

அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

ஐந்நூற்றி முப்பத்தியேழு... முப்பத்தியெட்டு... முப்பத்தி...

கிடத்தப்பட்டுக்கொண்டிருந்தன உடல்கள்.

- ஜீவன்

---

## எங்களால் ....

(62 ஆம் பக்கத் தொடர்ச்சி )

சால் போட்டுச் சாப்பிடுங்கோ"

"அக்கா உங்களைப் போல மற்றப் பொம்பிளையளும் கதைக்கத் தொடங்கினால் அவையள் பல கஷ்ரங்களில இருந்து தங்களை விடுவிக்கலாம். முதல்ல நாங்கள் எங்களைப் புரிஞ்சு கொள்ள வேணும். எங்களாலயும் முடியும் எண்டதைத் தெரிஞ்சு கொள்ள வேணும்"

- ரஞ்சினி



## செய்திக் குறிப்பு

01.07.1992 (வீ) 0000000000 கொக்கட்டிச்சோலையில் 10 தமிழர்கள் இராணுவத்தினரால் சுடப்பட்டும், உயிருடன் தீயிலிடப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.

என்ன காரணத்தைக் கொண்டும் வடக்கு-கிழக்கு முஸ்லீம்களின் தனித்துவம், பாதுகாப்பு, பிரதேச உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்க மாட்டோம். அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பேசும் பிரதேசத்தில் முஸ்லீம் மாகாணசபை அமைவதோடு அதன் சுயாட்சி எல்லைக்குள் மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, யாழ் மாவட்டங்களின் முஸ்லீம் பெரும்பான்மைப் பிரதேசங்களும் அமைய வேண்டும்

- முஸ்லீம் காங்கிரஸ்

03.07.1992 (வீ) 0000000000 புதுக்குடியிருப்பு பகுதியில் 6 பேருக்கும், மன்னார், வவுனியா, விசுவமடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 9 பேருக்கும் புலிகள் மரணதண்டனை விதித்துச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

07.07.1992 (வீ) 0000000000 நொச்சிமோட்டைப் பகுதியில் வைத்து காட்டிக் கொடுத்தோர் என்ற பேரில் 40 வயதிற்கு மேற்பட்ட 9 பேர் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

08.07.1992 (வீ) 000000000 தோட்ட நிர்வாகத்துடன் ஏற்பட்ட தகராறு காரணமாக வேலைநிறுத்தம் நடைபெறும் தலவாக்கல தோட்டத்திற்குள் புகுந்த காடையர்களினால் தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர்களின் லயங்கள் மீது கல்வீச்சு நடாத்திய காடையர்கள் லயங்களுக்குள் அத்துமீறிப் புகுந்து தொழிலாளர்களின் உடமைகளைத் தூக்கிக்கொண்டு வந்து வெளியில் போட்டுத் தீவைத்துக் கொளுத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன்வைத்திருக்கும் 4 அம்சத் திட்டத்தை நிராகரிப்பதென சு.க தீர்மானித்துள்ளது. வடக்கு-கிழக்கு இணைப்பையும், இந்திய- இலங்கை ஒப்பந்தத்திலுள்ள தற்காலிக இணைப்பையும் சு.க எதிர்த்தே வருகிறது.

09.07.1992 (வீ) 0000000000
கிழக்கில் 3 பொதுமக்களைப் புலிகள் சுட்டுக் கொன்றுள்ளனர்.

புதிய தபாலகங்களில் தனிச் சிங்களம் மட்டுமே எழுதப் பட்டுள்ளது.

10.07.1992 (வீ) 0000000000
பாராளுமன்றத் தெரிவுக்குழு சார்பில் வெளியிடப்பட்டுள்ள பிரதேச ராஜ்ய சபை என்ற யோசனை வடக்கு, கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை. அந்த யோசனையில் எமக்குத் திருப்தி கிடையாது - மு.கா

யூன் 28 இலிருந்து யூலை 6ஆம் திகதி வரை 340 தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

11.07.1992 (வீ) 0000000000
புசல்லாவ தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட காணிப் பகிர்வை ஆட்சேபித்தும், தமக்கும் காணி வழங்கப்பட வேண்டுமெனக் கோரியும் தமிழ்த் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். இவர்களுக்கு ஆதரவாக மேற்படி தோட்டத்தில் வேலை செய்யும் சிங்களத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

12.07.1992 (வீ) 0000000000
கேகாலை மாவட்டத்தில் தனியார் கொம்பனிகளுக்குக் கையளிக்கப்பட்ட தோட்டங்களில் நிர்வாகிகளின் அடாவடித்தனம் தலைதூக்கியுள்ளது. 6 மணிக்குப் பிரட்டுக்குச் செல்லத் தவறும் தொழிலாளர்கள் வீட்டுக்கு விரட்டப்படகிறார்கள். புல்லு வெட்டுபவர்களுக்கு ஒரு குறிப்பிட்டளவு ஒதுக்கப்பட்டு அதை வெட்டி முடிக்கும்படியும், அதுவும் பகல் 12 மணிக்கு 2/3 பங்கு வேலை முடிந்திருக்க வேண்டும் என்றும், இல்லையேல் அரைப் பேருடன் வீட்டுக்கு விரட்டப்படுவதாகவும் . தெரிவிக்கப்படுகிறது.

14.07.1992 (வீ) 0000000000
முந்தல் கடலில் மீன் பிடிக்கப் பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டுள்ளதால் 2,500 குடும்பங்கள் தங்கள் ஜீவனோ



பாயத்தை இழந்து பாதிப்படைந்துள்ளன.

குண்டசாலை தமிழ் வித்தியாலயத்தில் போதிய கட்டிட, தளபாட வசதியின்மையால் கல்வி பயிலும் பிள்ளைகள் பாடசாலை வளவுக்குள் உள்ள பலா மரத்தடியில் பாய் விரித்து உட்கார்ந்து கல்வி பயில்கின்றனர். மழை காலங்களில் வகுப்பு இல்லை. கரும் பலகையோ, தண்ணீர், மலசல கூட வசதிகளோ எதுவுமேயில்லை. ஆனால் பிள்ளைகளை சேர்க்கும்போது 100ரூபா வசூலிக்கப்படுகிறது.

15.07.1992 (வீ) 0000000000
இராணுவத்திலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் விட்டுச் சென்ற சுமார் 4 ஆயிரம் இராணுவத்தினருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென இராணுவ மேலிடம் எச்சரித்துள்ளது.

16.07.1992 (வீ) 0000000000
காத்தான்குடியிலிருந்து கல்முனையை நோக்கி முஸ்லீம்கள் பயணம் செய்த வாகனமொன்று ஆயுதபாணிகளால் வழிமறிக்கப்பட்டு துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதால் 19பேர் கொல்லப்பட்டுள்ளனர். இப் படுகொலைக்கு புலிகள் பொறுப்பாக இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது. இருந்தாலும் முஸ்லீம்-தமிழ் சமூகங்களை நிரந்தரமாய் பிரித்து வைப்பதில் அக்கறையுள்ள வேறு சில சக்திகளுக்கும் இதில் சம்பந்தமுண்டா என ஆராய வேண்டுமென மு.கா தெரிவித்துள்ளது.

18.07.1992 (வீ) 0000000000
இலங்கை இனப் பிரச்சினையை விளங்கிக்கொள்ளக் கூடியளவிற்கு முன்னாள் பிரதமர் ராஜீவ் அறிவு முதிர்ச்சியும், பக்குவமும் கொண்டவராக இருக்கவில்லை. பி.வி.நரசிம்மராவுடன் பேச புலிகள் தயாராக இருக்கின்றார்கள் - பாலசிங்கம்.

கிழக்கு மாகாணத்தின் இனவிகிதாசாரத்தைக் கருத்திற் கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும் இரு தனித்தனி சுயாதீனக் கூறுகளாக இருக்க வேண்டும் என்றும், அவசரகால விதிகளின் கீழ் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பாராளுமன்றச் சட்டம் மூலம் பிரிக்க வேண்டும் என்றும் முஸ்லீம் தேசிய மகாநாட்டில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

20.07.1992 (வீ) 0000000000
யாழ்குடா நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிகளின் தொகை 70 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

அவிசாவளைப் பகுதி தோட்டத் தொழிலாளர்களை மேலதிகமாக வேலை செய்யுமாறு தனியார் கொம்பனி நிர்வாகம் நிர்ப்பந்தித்து வருகிறது. இதைச் செய்யாத பட்சத்தில் அரைப் பெயரே பதியப்படுகிறது. சராசரி 250 றப்பர் மரங்களில் பால் வெட்ட வேண்டிய தொழிலாளி 400 மரங்கள் வரை வெட்ட வேண்டும் என இப்போது நிர்ப்பந்திக்கப்படுகிறார்.

குடியிருப்பதற்கு போதிய வசதியில்லாத நிலையில் லயத்திற்கு முன்புறமோ, பின்புறமோ சிறு குடிசைகளை அமைக்கும் தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்படுகிறார்கள்.

1988-1990 வரையிலும் 91 இன் குறிப்பிட்ட காலப் பகுதியிலும் பரா இராணுவக் கறுப்புப்பூனைகள் குழுவினால் ஆண், பெண், சிறுவர்களென 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். இடதுசாரி மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சிக்காரர்களை ஒழிப்பதற்கென்றே ஆளும் ஐ.தே.க. வினால் கறுப்புப் பூனைகள் குழு உருவாக்கப்பட்டது. இதற்கு அரசாங்கம் நிதியுதவி செய்தது. கறுப்புப் பூனைகள் குழு உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா அலவன்சும், வேறு பல சலுகைகளும் வழங்கப்பட்டன. அவர்கள் இலக்கமிடப்படாத அரச வாகனங்களையே பயன்படுத்தினர் - முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர்.

இவ்வருட முதல் 3 மாதகால இறுதியில் 360.6 பில்லியன் ரூபாவை கடன் பாக்கியாக செலுத்த வேண்டிய நிலையில் இலங்கை இருந்தது. இதில் 60 வீதமான கடன்கள் வெளிநாட்டு கடன்களாகும் - மத்திய வங்கி.

23.07.1992 (வீ) 000000000

கொத்மலை தோட்டத்தில் சிங்களத் தொழிலாளர்களுக்கு மாத்திரம் ஜனசக்தி உணவு முத்திரை வழங்கப்பட்டு வருகிறது. தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள்.

22.07.1992 (வீ) 0000000000

7 தமிழ் அரசியல் கட்சிகள் முஸ்லீம் காங்கிரஸின் ஆதரவைப் பெறுவதற்காக அதனிடம் சமர்ப்பித்துள்ள ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் இன அடிப்படையில் அரசியல் பிரிவுகள் எதனையும் உருவாக்கும் முயற்



சியை கடுமையாக எதிர்ப்பதாக சிங்கள ஆரக்ஷக சங்விதானய என்ற அமைப்புத் தெரிவித்துள்ளது.

24.07.1992 (வீ) 0000000000

அரசியல்வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றவே ஆசைப்படுகின்றனர். சகோதரர்களே சகோதரர்களைக் கொல்லும் இந்த யுத்தத்தை எவ்வளவு காலத்திற்குத்தான் தொடரவிடுவது? எமக்காக இந்தப் போரை நடத்துபவர்கள் யார்? கிராமப்புற இளைஞர்கள்தான் போரில் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். அரசியல்வாதிகளின் பிள்ளைகள் வெளிநாடுகளிலும், பல்கலைக் கழகங்களிலும், கிளப்புகளிலும், நீச்சல் தடாகங்களிலும் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் - தகவல் துறை ராஜாங்க அமைச்சர் ரணசிங்க.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பரீட்சையை நடத்த முடியாத காரணத்தினால் அரசின் வேண்டுகோளின் பேரில் வடகொழும்பு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்ற வந்த 4 யாழ் மாணவர்கள் இரகசியப் பொலிஸாரினால் கடத்தப்பட்டுள்ளனர்.

25.07.1992 (வீ) 0000000000

கிழக்கு மாகாணத்தில் கடைசி முஸ்லீம் உயிர் துறக்கும் வரை முஸ்லீம் சமூகம் புலிகளை எதிர்த்து போராடும். கிழக்கில் நடைபெறும் முஸ்லீம்கள் படுகொலைகளுக்கு எல்லாம் புலிகளை மாத்திரம் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இஸ்ரேலிய ஏஜெண்டுகள் புலிகளுக்கு மாத்திரமல்ல , வேறு அமைப்புகளுக்குள்ளும் இருக்கலாம் - மு.கா

28.07.1992 (வீ) 0000000000

ஊவா பகுதியில் சிவிலுடையினரால் தமிழர்கள் கடத்தப்படுவது மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

பண்டாரவளையில் 7 தோட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து இப் பகுதியில் சுமார் 7 ஆயிரம் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

தேயிலை மலையில் கவ்வாத்து வெட்டும் மரங்களின் எண்ணிக்கையை தோட்ட நிர்வாகங்கள் கூட்டியதை ஆட்சேபித்து சுமார் 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலிருந்து ஓர் துண்டுப்பிரசுரம்

# சேந்தன் எங்கே?

கொலை வெறி பிடித்த பாஸிலக் கரங்களுக்குள் மக்களை நேசித்த இன்னுமோர் மனிதன்.

ஆம்!

பொறியியலாளர் சேந்தன் புலிகளால் கைது!

யார் இவர்?

வீண் ஆடம்பரங்களைக் கொண்டு தம்மை அறிமுகம் செய்யும் அற்பமான மனிதர்கள் வாழும் இந்த உலகில் எந்தவித வீணான ஆடம்பரங்களுமின்றி அடக்கமாக வாழ்ந்த ஓர் அற்புதப் பிறவி!

மனித நேயமே மலடாகிப்போன எமது மண்ணில் மக்களை மனதார நேசித்த ஓர் மனித ஜீவன்.

மண்மீட்பு என்ற பேரில் மறைந்துபோன காட்டுமிராண்டித்தனங்களையெல்லாம் மீட்டெடுத்து மக்களை அழிக்கும் அரசியல் நிலவுகின்ற எமது மண்ணை உண்மையாக நேசித்த ஓர் உன்னதப் பிறவி.

விடுதலை, போராட்டம் என்ற பேரில் கோடிகோடியாக மக்களிடம் கொள்ளையிட்டு தாம் மட்டும் சுகபோக வாழ்க்கையை அனுபவித்தபடி மக்களுக்கு கொலையையும், சித்திரவதைகளையும் மட்டுமே வழங்கும் வெறியர்கள் வாழும் மண்ணில் தனது உழைப்பு முழுவதையுமே தன் சக ஊழியர்களுடன் சமனாகப் பங்கிட்டு தானும் ஒரு சாதாரண தொழிலாளியா



கவே வாழ்க்கை நடத்திய ஓர் அதிசய மனிதன்.

ஆம் மொத்தத்தில் இவர் ஓர் உண்மை மனிதன்.

தமிழ் மண்ணில் குறிப்பாக வடக்கில் சீவல் தொழில் மூலம் கள்ளு இறக்குவதையே தம் ஒரே வருமானமாகக் கொண்ட பல்லாயிரக் கணக்கான குடும்பங்களின் நல்வாழ்விற்கு ஓர் மறைமுக ஆதார சக்தியாக திரு சேந்தன் அவர்கள் விளங்கினார் என்பது பலரும் அறியாத உண்மையாகம்.

எப்போதுமே வேற்றுநாட்டு தொழில்நுட்ப இயந்திரங்களை உபயோகித்துப் பழகிப்போன எமது மக்களுக்கு தனது சொந்த அறிவையும், திறமையையும் பயன்படுத்தி எமது மண்ணின் மூலவளத்தையே பொன்னாக்கும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தவர் திரு சேந்தன். திக்கம், வரணி, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள உள்ளூர் பனஞ்சாராய வடிசாலை இயந்திரங்கள் இவரின் சொந்த வடிவமைப்புகளே! அவை இன்றுவரை வெற்றிகரமாக இயங்குவதற்கும் இன்னும் பல இயந்திரங்களை வடிவமைப்பதற்கும் ஓய்வு ஒழிச்சலின்றி தன் சக ஊழியர்களுடன் கடுமையாக உழைத்தவர் திரு சேந்தன்.

இந்த வடிசாலைகளை வெற்றிகரமாக தாங்களே நடத்துவதாகக் காட்டிக்கொள்ளும் புலிகள் இதிலிருந்து மட்டும் வருடத்திற்கு 20 கோடி ரூபாக்களை இலாபமாகக் கொள்ளையிட்டுச் செல்கின்றனர் என்பது பலரும் அறியாத மிகக் கசப்பான உண்மையாகும்.

ஈரான், பிரான்ஸ், கனடா, இந்தியா போன்ற பல நாடுகளில் வேலை செய்த பின்னர் தனது சொந்த மண்ணில் செயற்படுவதே சரியானது என்ற இதயசுத்தியோடு நாடு திரும்பிய இவர் யாழ்ப்பாணத்தில் 'Sky Lark' என்னும் பொறியியற்சாலையை ஆரம்பித்து செயற்பட்டார். தற்போது அது 'Eziroville' என்னும் பெயரில் இயங்கிவருகிறது.

எப்போதும் எம் சொந்த மண்ணின் மூலவளங்களை வைத்தே தனது திட்டங்களைச் சிந்திக்கும் இவர் தன்னோடு தொழில் செய்த அனைவரையும் கூட அப்படிச் சிந்திப்பதற்குப் பழக்கினார்.

ஆனால் இன்று புலிகளின் பட்டியலில் சேந்தன் ஒரு துரோகி!

எந்தவொரு கட்டத்திலும் தனது தனித்துவத்தையும், மனித மாண்பையும் இழந்துவிடாது கம்பீரத்துடன் சரியைச் சரியெனவும் தவறைத் தவறெனவும் நேருக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர் சுட்டிக்காட்டிய நேர்மையுள் எம் படைத்த இவரை இக் கொடியவர்கள் சந்தேகித்தது ஏன்?

எப்போதுமே தங்களைவிட திறமையுள்ள, தனித்துவமான, ஆளுமையுள்ள எவரைக் கண்டாலும் சந்தேகித்து பீதியுற்று அவர்களை தீர்த்துக்கட்டும் செயற்பாட்டையே தமது கொள்கையாகக் கொண்ட இக் கேடுகெட்ட கொடியவர்களுக்கு திரு சேந்தனும் இன்று இரையாகிவிட்டார்.

தமிழ்ப்புலமை பெற்ற திரு பண்டிதர் வீரகத்தியின் மூத்த புதல்வரான இவர் 3 குழந்தைகளின் தந்தை. தனது கடுமையான உழைப்பினால் உடல்நலம் குன்றியவர். எந்தக் கடுமையான வேலைச் சுமைகளுக்கு மத்தியிலும் தன் குழந்தைகளுடன் சிறிது நேரமாவது மனம்விட்டுப் பேசி மகிழும் ஒரு ஆழமான பாசமுள்ள தந்தை இவர்.




கடந்த சித்திரை மாதம் 14ஆம் திகதி கற்சிலைமடுவில் வைத்து விசாரணைக்காகப் புலிகளால் கைது செய்யப்பட்டார். ஒன்றரை மாதங்களாகியும் விடுவிக்கப்படவோ, எவருக்கும் காட்டப்படவோ இல்லை. இதுவரை அவரை விடுவிப்பது பற்றித் தீர்க்கமாக புலிகளால் எதுவுமே கூறப்படவும் இல்லை. திரு சேந்தன் அவர்களை அறிந்த அவரை நேசித்த நெஞ்சிலே ஈரமுள்ள அனைவரும் ஒன்றுசேர்ந்து உரத்துக் கேட்கிறோம்.

புலிகளே எங்கள் சேந்தன் எங்கே?
உடனே அவரை விடுதலை செய்யுங்கள்.
அவரைப் போன்றே நீங்கள் அடைத்து வைத்திருக்கும் ஆயிரக்கணக்கான மனச்சாட்சியின் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள்.

*– திரு சேந்தன் அவர்களை அன்போடு நேசிக்கும் நண்பர்கள் (ஈழம்), 01.06.92*



# கள்ளர் கூட்டு



( கலம் 51 இன் தொடர்ச்சி )

## *அடக்குமுறை நடவடிக்கைகள்*

ஜெனரல் வோசியெச் ஜருசெல்ஸ்கி (Wojciech Jaruzelski) 13.12.1981இல் இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியவுடன் வொஷிங்ரனும், வத்திக்கானும் சொலிடர்நொஸ்க் இயக்கத்தை அழியாமல் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டன. அந்த இருண்ட காலத்தில் ஏனைய நாடுகளுடனிருந்த போலந்தின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. 6 ஆயிரம் சொலிடர்நொஸ்க் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். தேசத்துரோகம், சதிவேலை, எதிர்ப் புரட்சி போன்ற குற்றச்சாட்டின் கீழ் நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். 9 பேர் கொல்லப்பட்டார்கள். தொழிற்சங்கம் தடைசெய்யப்பட்டது. ஆனால் ஆயிரக்கணக்கானோர் தலைமறைவானார்கள். பலர் தேவாலயங்களிலும், தேவாலயத் தலைவர்களின் வீடுகளிலும், போதகர்களிடமும் பாதுகாப்புத் தேடினார்கள். அரசாங்க அதிகாரிகள் வலேலாவைப் பிடித்து, அதிக தொலைவிலுள்ள வேட்டையாடுவோர் விடுதியில் தடுப்புக்காவலில் வைத்தனர்.

போலந்துப் பாதுகாப்புப் படைகள் வீதிக்கு வந்த சிறிதுநேரத்தின்பின் றீகன் ஆலோசனை பெற போப்புடன் தொடர்பு கொண்டார். தொடர்ந்தும் சில நாட்களாக நட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்த பல கூட்டங்களின்போது றீகன் தங்களது விருப்பங்கள் குறித்துக் கலந்தாலோசித்தார். முன்னாள் அரச செயலாளர் ஹேக் (Haig) தனது ஞாபகத்தில் இருந்து கூறியது:

"போலந்துக்கு எதிராக எடுக்கப்போகும் நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கும்போது மந்திரிசபையிலும், தேசியசபையிலும் எமக்கிடையே பெரும் சச்சரவுகள் ஏற்பட்டன. போலந்த்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்ற இவர்களின் நடவடிக்கைகள் 1956இல் கங்கேரியிலும், 1968இல் செக்கோசெலவாக்கியாவிலும் ஏற்பட்ட நிலை போன்ற ஓர் அபாய நிலைக்குத் தள்ளக்கூடியதாகவிருக்கும் என்று கருதப்பட்டது"

றோமன் கத்தோலிக்க மதத்தில் பற்றுமிக்கவரான தூதுவர் லாச் வேர்னொன் வல்ரேர்லை (Large Vernon Walters) ஹேக் ஜோன் போலைச் சந்திப்பதற்கு அனுப்பினார். வல்ரேர்ல் றோமிற்கு வந்தவுடனே போப்பையும், வத்திக்கானின் வெளிநாட்டு அமைச்சர் காடினல் கலறோலியையும் (Cardinal Casaroli) தனித் தனியாகச் சந்தித்தார். ஸொலிடர்நொஸ்க்கின் வெளிச்சம் அணைக்கப்பட்டுவிடக் கூடாதென்றும், தமது பிரச்சாரம் சோவியத் யூனியனைத் தனிமைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்றும் இரு தரப்பும் ஏற்றுக்கொண்டார்கள். அத்துடன் போலந்து அரசாங்கத்தை ஒரு குறிப்பிட்ட பொருளாதார, தார்மீக அழுத்தத்திற்கு உள்ளாக்க வேண்டும் என்பதையும் இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டார்கள்.

ஸொலிடர்நொஸ்க்கை இரகசியமாக இயங்கும்படியும், வீதியில் சென்று ஆர்பாட்டம் செய்வதன் மூலம் வார்ஸோ ஒப்பந்தத் துருப்புகளை ஆத்திரமூட்டி அவை தலையிடக்கூடிய சூழ்நிலையையோ அல்லது போலந் பாதுகாப்புப் படையுடன் உள்ளூர் போரைத் தொடுப்பதையோ தவிர்த்துக்கொள்ளும்படி ஸொலிடர்நொஸ்க்கின் 10 மில்லியன் அங்கத்தவர்களுக்கும் அறிவிக்கும்படி வலேஸாவிற்கு கத்தோலிக்கத் திருச்சபை மூலம் போப் ஆலோசனை வழங்கியதாக அமெரிக்க உளவு ஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன.

போலந்திற்கும், வத்திக்கானுக்கும் உள்ள நேரடி தொலைபேசி தொடர்பை கொம்யூனிஸ்ட்டுகள் வெட்டியதன் காரணத்தால் போப் வார்ஸோவில் இருக்கும் யோசெப் கார்டினல் கிளெம்புடன்(Jozef Cardinal Glemp)வானொலியில் தொடர்பு கொண்டார். போலந்



தின் நிலை பற்றி அறிவிக்க தனது தூதுவர்களை போலந்திற்கு அனுப்பினார்.

"வத்திக்கானின் தகவல் தொடர்புகள் எங்களுடையதிலும் பார்க்க எல்லா விதத்திலும் சிறந்தவையும், துரிதமானவையுமாகும். எங்களுக்குச் சொந்தமாக மிகச் சிறந்த செய்தி ஸ்தாபனங்கள் இருந்தும் அச் செய்திகள் ஓர் உளவு ஸ்தாபனத்தின் ஊடாக வடிகட்டி வருவதன் காரணமாக செய்திகள் கிடைக்க மிகவும் சிரமம் ஏற்பட்டது" என்கிறார் ஹேக்.

தேவையான அமெரிக்காவின் இரகசியத் தகவல்களையும் போப்பிற்கு இயன்றளவு விரைவில் கொடுக்கும்படி பிரச்சினையின் தொடக்கத்தில் றீகனால் உத்தரவிடப்பட்டிருந்தது. சி. ஐ. ஏ. யிற்கு இரகசியமாகத் தகவல் கொடுத்துக் கொண்டிருந்த ஓர் போலந்த் உதவி பாதுகாப்பு அமைச்சரின் தகவல்களும் போப்பிற்குக் கொடுக்கப்பட்டது. போலந்தின் உயர் இராணுவ அதிகாரியும், கார்த்திகை 1981வரை சி.ஐ.ஏ யிற்கு உளவாளியாகவும் இருந்த கேனல் றைஸார் குகிளின்ஸ்கி (Colonel Ryszard Kuklinski) அனுப்பிய தகவல்களும், ஆய்வுகளும் மற்றைய அறிக்கைகளுடன் வத்திக்கானுக்கு கையளிக்கப்பட்டன.

போலந்த் அரசாங்கம் இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால் சோவியத் யூனியன் போலந்தை ஆக்கிரமிக்கும் என குகினின்ஸ்கி எச்சரிக்கை செய்த தின்பின் அவரை போலந்திற்கு வெளியே கடத்துவதற்கு உத்தர விடப்பட்டது.

இதற்கு முன்னர் 1980இன் இறுதியிலும் சோவியத் இராணுவத்தின் நடவடிக்கை பற்றி குகினின்ஸ்கி எச்சரித்துள்ளார். இதன் வினைவாக, சோவியத் இராணுவம் ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டால் பதிலடியாக சீனாவிற்கு மிகவும் சிறந்த முறையில் இயங்கும் ஆயுதங்கள் விற்கப்படும் என்ற இரகசியச் செய்தியை காட்டர் (Carter) அரசின் ஆட்சி முடிவில் லியொனிட் பிரஸ்நோவிற்கு (Leonid Brezhnev) அறிவித்தார்கள்.

இந்த நேரத்தில், பிரஸ்நோவ் மிகவும் பொறுமையிழந்து விட்டார் , என்றும், நாட்டில் வேளாண்மை கூடாமலிருந்தால் விவசாயப் பொருட்களை அனுப்புவதற்கு இயந்திரமயமாக்கிய இராணுவத்தின் உதவி கிறெம்ளினுக்குத் (Kremlin) தேவையற்றது என்றும், அதற்குப் பதிலாக அவர்களை ஆக்கிரமிப்புக்கு பாவிக்கலாம் என்றும் குக்கினின்ஸ்கி வொஷிங்ரனுக்கு அறிவித்தார்.

"எங்களுக்குத் தெரிந்த எல்லா விடயங்களிலும் போப்பிற்கு எவை தெரியாது என்று நாம் நினைத்தோமோ அவற்றையெல்லாம் உடனடியாகப் போப்புக்குத் தெரிய வைத்தோம்" என்று றீகன் சொல்கிறார். *( தொடரும் )*

– தமிழில்: மனோ




*"காசு மாறினியாம். ஊருக்கு அனுப்பவோ?"*

*"சீ அங்கை என்னத்துக்கு. இந்தியாவிலியிருந்து நடிகைமார் வருகினமாம். அவைக்கேதேன் நகை, நட்டு வேண்டிக் குடுப்பம் என்டு தான்"*

*– இன்னன்னா*



# யுத்த மேகங்கள்



எமது தேசத்தின்
வடக்குப் புறம் முழுக்க
இப்போது
கன்னங் கரேலென்று
கறுப்பாகப் படர்ந்து போய்..

இரண்டு முனைகளில்
இரண்டு கறுப்புப்
பீரங்கிகள்
நெருப்பைக் கக்க தயாராக.

வாழ்வுக்கும் சாவுக்கும்
கட்டியங் கூறியும்
வரவேற்புப் பிரச்சாரம்
சாவுக்குத் தான்.

ஈவிரக்கமற்ற
இரண்டு பகுதியினரின்
மேனியிலும்
காக்கிச் சட்டைகள்
துப்பாக்கிகள்.

உமிழும் நெருப்பின் சுவாலைக்குள்
அகப்படுபவன்
வெறும் மனிதன் தான்.

இழப்புகளுக்கு
புள்ளி விபரம் காட்டுகையில்
இரண்டு பக்கமுமே
மனிதாபிமானத்தை
நினைக்கின்றன
ஏனென்றால்–

அடாவடி அராஜகம் கூறுகிறது
மறுமுனைத் தாக்குதலால்
மாள்வது மனிதன் தானாம்!

அடக்கும் பாணியைப்
போர்த்த மற்றையது கூறுகிறது
மாள்வது மனிதன் தானாம்!

எங்கே போவது?
கோவில்களும், தேவாலயங்களும்,
ஆஸ்பத்திரிகளும்
இப்போது
ஆயுதம் தாங்கி நிற்கும்போது ?

வாழ்வுக்கும் நிம்மதிக்கும்
சுவடுகள் இல்லாமலே
எமது தேசம் வெறுமையாகி
இன்றோடு எத்தனை ஆண்டுகள்??

எதனைச் சொன்னாலும்
ஈழத்தை நோக்கி இறங்கப் போகும்
யுத்த மேகங்கள்
வரவர
இருண்டுகொண்டே போகின்றன...

*
இளைய அப்துல்லாஹ் (இலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தற்கொலையாளிகள்

இரு வேறுபட்ட கருத்துகளுக்கு இடமளிக்கக்கூடிய " தற்கொலையாளிகள் " (Sucide Killers) எனத் தலைப்பிடப்பட்ட வீடியோ நிகழ்ச்சியைத் தனது Insid Story என்ற நிகழ்ச்சித் தொடரில் பி.பி.சி தொலைக் காட்சி கடந்த வருட இறுதியில் ஒளிபரப்பியது.

பிரபாகரன் உட்பட புலிகள் இயக்க உயர் மட்டத் தலைவர்கள் இதில் ஒருசேர தோன்றியுள்ளமையையும், இந் நிகழ்ச்சி தயாரிக்கப்பட்ட கலைப்பின்னணியையும் நோக்கும்போது புலிகள் இதனை முக்கியமானதாகக் கருதியிருப்பது தெரிகின்றது.

ஒரு வருடத்திற்கும் மேலாக இலங்கை இராணுவத்தினருடனான தொடர்ச்சியான யுத்தம், புலிகள் பற்றிய இந்திய/தமிழ் நாட்டு அரசின் கடும்பிடி நடவடிக்கை - புலிகள் ஒப்புக்கொள்ளாவிடினும் (மாத்தயாவின் பேட்டி, Langa Guardian நவ.15/91) - அவர்களுக்கு உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும், பல இடையூறுகளையும், தளர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாததாகும். இந் நிலையில் தமது "அரசியல் இலட்சியத்தையும்", தமது போராளிகளின் தியாகத்தையும், தமக்கு யாழ்ப்பாண மக்கள் அளிக்கும் "ஆதரவை"யும் வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவதற்கும், அதன் மூலம் மீண்டும் ஆதரவை ஏற்படுத்தவும் ஒரு வாய்ப்பாக பி.பி.ஸி தயாரிக்க



விரும்பிய நிகழ்ச்சியை அவர்கள் கருதியிருக்கின்றனர். பி.பி.ஸி யாழ்ப்பாணத்தில் படமாக்கிய காட்சிகள் புலிகளின் ஒத்துழைப்பையும், பெரும்பாலும் அவர்களது காட்சித் தேர்வையும் புலப்படுத்துகின்றன.

புலிகளது உயர்பீடம், முக்கியமானது, தமது இயக்கம் பற்றிய சாதகமான அபிப்பிராயத்தை வெளியுலகில் ஏற்படுத்தவல்லது என்று கருதி, காட்சிகளை பெரும்பாலும் தேர்ந்து கொடுக்க தயாரிக்கப்பட்ட இந் நிகழ்ச்சியில் மேற்கிளம்புகிற பெண்கள் பற்றிய புலிகளின் நோக்கு குறித்தே எனது விமர்சனத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பெண்கள், பெண் போராளிகள் பற்றிய புலிகளின் பார்வையும், கருத்து நிலையும் தெளிவாக இந் நிகழ்ச்சியில் உருவாக்கம் பெறுகின்றன. பெரும்பாலான தேசிய இயக்கங்களைப் போலவே புலிகளின் தேசியமும் பால்நிலைப்படுத்தப்பட்டதாகவும் (Genidered), ஆண்நிலைப்படுத்தப்பட்டதாகவும் (Masculinizied) உள்ளது என்பதற்கு இந்த வீடியோ நிகழ்ச்சியின் காட்சிகள் துல்லியமான ஆதாரங்களாகின்றன.

இந்த வீடியோ நிகழ்ச்சியில் பெண்களைப் பற்றிய பேச்சு இடம்பெறும்போது புலிகளின் பிரதான பேச்சாளர் அன்ரன் பாலசிங்கத்தின் மனைவியான அடேல் (அவுஸ்திரேலியப் பெண்) புலிகள் இயக்கம் பெண்களைச் சமத்துவமாகவே நடத்துகிறது (!) எனவும், பெண்கள் ஆண்களைப் போலவே சகலவிதமான பயிற்சிகளும் பெற்றுத் தாக்குதல் உட்பட சகல நடவடிக்கைகளிலும் பங்குபற்றுகிறார்கள் எனவும் கூறுகிறார்.

இதனைத் தொடர்ந்து பெண்கள் பங்குபற்றும் சில காட்சிகள் பின்வருமாறு:

1. பெண்கள் இராணுவப் பயிற்சி பெறுதல், இயக்கத்திற்கும், தலைவர் வே.பிரபாகரனுக்கும் விசுவாசமாக இருப்போம் எனச் சத்தியப் பிரமாணம் செய்தல்.

2. அவர்களது சத்தியத்தை ஏற்றுக்கொண்டு அதன் அடையாளமாக சயனைட் மாலை வழங்கப்படுதல்.

3. காயமடைந்த பெண் போராளி சிகிச்சை பெறுதல்.

4. அங்கவீனரான பெண் போராளியுடன் உரையாடல்.

5. பெண் போராளியின் இறுதிக் கிரியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காட்சிகள் மேலே உள்ள ஒழுங்குமுறையிலோ, ஒன்றை அடுத்து ஒன்றாகவோ இடம்பெறவில்லை. ஆனால் புலிகளின் பெண்கள் பற்றிய கருத்து நிலையைத் தெளிவாக்குவதற்காக இவற்றைத் தனியாகத் தொகுத்துள்ளேன்.

இந்தக் காட்சிகளின் உள் உறையும் கருத்துநிலையை வெளிக்கொணர முன்பு, தேசிய இயக்கத்தில் பெண்களது பங்குபற்றுதல் தொடர்பான முற்குறிப்பொன்றைக் கூற வேண்டியது அவசியம். இந்தக் குறிப்பும் தகவல்களும் பின்னால் எனது கருத்தாய்வுக்கும், கூற்றுகளுக்கும் பின்னணியாக அமையும்.

தமிழ்த் தேசியக் குழுக்களில் பெண்கள் சேர்வதும், வெளிப்படையான எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதும் 80களின் ஆரம்பத்திலிருந்து கணிசமாக அதிகரித்தது. அக் காலத்தில் தலைமறைவாக இயங்கிய இக் குழுக்களில் பெண்கள் சேர்ந்தமைக்கு தேசிய விடுதலை நோக்கத்தை விட சமூகத்தில் அவர்களது தாழ்த்தப்பட்ட நிலையும் முக்கிய தூண்டுகோலாக அமைந்தது.

மீண்டும் மீண்டும் ஒரே வட்டத்திற்குள் சுழலும் சாதாரண வாழ்விலிருந்து வேறுபட்டதாகவும், அதனால் ஆர்வமூட்டுவதாகவும் இயக்க வாழ்வு அமைந்திருந்தது. ஆனால் ஆண்களாலேயே தோற்றுவிக்கப்பட்டு, அவர்களாலேயே வழிநடத்தப்பட்ட இந்த இயக்கங்கள் சமூகத்தில் ஏற்கெனவே ஆண், பெண்ணுக்கிடையே நிலவிய வேலைப் பிரிவினையையே தமது ஸ்தாபனங்களிலும் கடைப்பிடித்தன. நிதி சேகரிப்பு, செய்திப் பரிமாற்றம், உணவு, மருத்துவம் தொடர்பான வேலைகள் ஆகியவற்றில் ஆரம்பத்தில் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.



"பூகொசெலவியா அகதியளை எடுக்கப் போகினமாம். புதுனமாயிருக்கெல்லே?"

"ஒரு புதினமுமில்லை. பூகோவுக்கு ஆயுதம் வித்த காசு எக்கச்சக்கமாக் கிடக்காம்"

-ராசன்



எனினும் நீண்ட தயக்க, மயக்கங்கள், விவாதங்கள், பெண்களின் இடைவிடாத வற்புறுத்தல்கள், யாவற்றிற்கும் மேலாக அதிகளவிலான போராளிகளைச் சேர்க்கவேண்டிய தேவை, ஆண்கள் பற்றாக்குறை ஆகியவற்றின் பயனாக பெண்கள் இராணுவப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். தாக்குதலிலும் பங்குபற்றினர்.

தமிழீழ தேசியவாதக் குழுக்களின் வரலாற்றில் முதன் முதல் பெண்களும் பங்குகொண்ட இராணுவத் தாக்குதல் 1985இல் நடைபெற்றது. காரைநகர் கடற்படைத் தளம் மீது ஈ.பி.ஆர்.எல்.எவ். மேற்கொண்ட தாக்குதலின்போது அதில் பங்குபற்றிய ஷோபா கொல்லப்பட்டார். இதற்கு அடுத்ததாக பெண்கள் பங்குபற்றிய முக்கிய தாக்குதல் 1986 இறுதியில் மன்னாரில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலாகும். அவர்களின் இராணுவ அணியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான விக்ரர் கொல்லப்பட்ட இம் மோதலின் போது இந்தியாவில் பயிற்சி பெற்ற முதலாவது பெண்கள் அணி பங்குபற்றியது. முதன்முறை யாக இலங்கை இராணுவத்தினர் சிலர் கைப்பற்றப்பட்டதும் இத் தாக்குதலின் போதாகும்.

இதனைத் தொடர்ந்து புலிகளின் முக்கியமான தாக்குதல்கள் பலவற்றில் பெண்கள் பங்குபற்றியுள்ளனர். இவற்றில் குறிப்பிடக்கூடியவை 90இன் இறுதிப் பகுதியில் இடம்பெற்ற கொக்காவில், மாங்குளம் இராணுவமுகாம் தகர்ப்புகளாகும். கொக்காவில் தாக்குதல் 9 பெண் போராளிகளைப் பலிகொண்டது. மாங்குளம் போரின்போது அதிகளவிலான பெண்கள் கொல்லப்பட்டனர். இவை இரண்டும் இராணுவ ரீதியாக புலிகளின் முக்கியமான வெற்றிகளாகும்.

புலிகளின் பெண்கள் அங்கத்துவ எண்ணிக்கை கணிசமானது. இராணுவம், மருத்துவம், பிரச்சாரம், மாணவர் பிரிவு முதலிய யாவற்றிலும் - ஆண்கள் தலைமையில் - பெண்கள் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளனர். இதன் மூலம் இயக்கத்தின் பலத்தை அதிகரித்துள்ளனர். ஆனால் அவர்களின் பணி சரியானபடி மதிக்கப்படவில்லை. "எமது இயக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தில் ஆணும், பெண்ணும் சமம்" என்று வசனம் பேசினாலும் நடைமுறை அவ்வாறாக இல்லை. பெண்களது பல வருடகால தீவிரமான பங்குபற்றுதல், தியாகங்கள் ஆகியவற்றின் பின்னர்கூட புலிகளின் உயர்மட்டக் குழுவில் ஒரு பெண்ணும் இடம்பெறவில்லை. அரசியற் பிரிவான மக்கள் முன்னணியின் உப செயலாளராக இருந்து இறந்துபோன மேஜர் சுந்தரியின் இடத்திற்கு மீண்டும் ஒரு பெண்ணும் நியமிக்கப்படவில்லை.

இத் தகவல்களின் பின்னணியிலேயே "தற்கொலையாளிகள்" என்ற வீடியோ நிகழ்வில் நான் முன்னர் குறிப்பிட்ட காட்சிகளோடு பொதிந்துள்ள கருத்து நிலையை ஆராய்தல் வேண்டும். ஏனெனில் தேர்ந்து கொடுக்கப்பட்ட இக் காட்சிகளில் வெளிப்படும் செய்தி அலட்சியப்படுத்தப்பட முடியாதது. பெண்களின் கவனத்திற்குரியது.

அன்ரன் பாலசிங்கம் தமிழ் ஈழப் போராட்டம் பற்றி விளக்கும் அரசியல் வகுப்பொன்றில் பங்கெடுக்கும் போராளிகளில் ஆண்களுடன் பெண்களும் காணப்படுகின்றனர். ஆனால் ஒரு தாக்குதலை நடாத்துவது எவ்வாறு எனக் கற்பிக்கப்படும் இராணுவக் கல்வி வகுப்பில் யாவரும் ஆண்களாகவேயுள்ளனர். இது தவிர பி.பி.ஸி கமராவிற்காக புனையப்பட்ட ஒரு போலித் தாக்குதல் நிகழ்ச்சியின்போதும் ஒரு பெண் போராளியும் சேர்த்துக் கொள்ளப்



படவில்லை.

இன்னோர் காட்சி: புலிகளின் முகாம் ஒன்று. யாவரும் ஆண் போராளிகள். திடீரென வான் தாக்குதலை அவர்கள் எதிர்கொள்ளுகின்றனர். எதிர் தாக்குதலுக்குத் தயாராகின்றனர். கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஒரு படையணி புறப்படுகின்றது. மீண்டும் அனைவரும் ஆண்கள். இக் காட்சியின் இறுதியில் உணவு மூட்டைகளைச் சுமந்தபடி களைத்த தோற்றத்துடன் சில பெண் போராளிகள் வருகின்றனர். போராட்டத்தில் பெண்கள் துணை பாத்திரங்களாகவே நோக்கப்படுவதை இக் காட்சி சித்தரிக்கின்றது.

போராட்டத்தின் அச்சாணியான , வலிமையின் குறியீடான , ஆயுதப் போராட்டத்திலன்றி ( நான் இவ்வாறு கருதவில்லை - புலிகளின் கருத்தையே குறிப்பிடுகிறேன்.) அந்தப் போராட்டத்தில் ஈடுபடும் ஆண் போராளிகளுக்குத் தேவையான உணவைச் சுமந்து வருபவர்களாக, (கவனிக்கவும்: பங்கிடுபவர்களாகவும் அல்ல) பெண்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். இன்னொரு வகையில் கூறினால் புலிகளின் பெண்கள் பற்றிய கருத்துநிலை மரபுரீதியானதாகவே தொடர்ந்தும் பேணப்படுவதையே இக் காட்சி விபரிக்கின்றது.

ஆயுதத்தைக் கையிலேந்திய ஆண், உணவைச் சுமந்து வரும் பெண் ஆகிய இவ்விரு படிமங்களும் பாரம்பரியமான ஆண், பெண் வேலைப் பிரிவினைக் கருத்தோட்டத்தையே பிரதிபலிக்கின்றன.

"சமத்துவம்" என்பது வசன வடிவம் மாத்திரமே. ஆனால் இக் காட்சிகளை ஒழுங்கு செய்தவர்களின் ஆழ் உணர்விலோ, கருத்து நிலையிலோ பெண்களின் முக்கியத்துவம் பதிந்திருக்கவில்லை என்பதே இங்கு முக்கியமானது. அப்படி இருந்திருப்பின் அவை நிச்சயம் காட்சிகளாக, படிமங்களாக உருப்பெற்றிருக்கும்.

நடைமுறையில் பெண்களது பங்கு இருந்தும்கூட கருத்து நிலையில் அது உருவாகவில்லை. காட்சிகளில் பிரதிபலிக்கவில்லை.

1991 யூன் நடுப்பகுதியில் புலிகள் நடத்திய முத்தமிழ் விழாவில் "மாமனிதர் கௌரவிப்பு" நடைபெற்றது. பிரபாகரனே - இரண்டாவது பொது நிகழ்ச்சிப் பங்குபற்றுதல் இது - மாமனிதர்களான 10 ஆண்களுக்குப் பரிசு வழங்கினார். பெண்கள் எவரும் மாமனிதர் ஆகும் தகுதி பெறவில்லைப் போலும்!

மேலே குறிப்பிட்டபடி, தாக்குதலில் பெண்கள் பங்குபற்றுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டப்படவில்லை. ஆனால் காயமடைந்த, அங்கங்களை இழந்த பெண் போராளிகள் காட்டப்படுகின்றனர். இக் காட்சிகள் இரு வகைகளில் மிக முக்கியமானவை

1. காயப்பட்ட பெண்ணுக்கு ஒரு ஆண் போராளி சிகிச்சை அளிக்கிறார். புலிகளின் மருத்துவப் பிரிவில் திறமைசாலிகளான பெண்கள் உள்ளனர். எனினும் ஆணே சிகிச்சையளிக்கின்றார் எனக் காட்டப்படுவது ஏன்? பெண் நோயாளி - ஆண் மருத்துவர் என்ற மரபுரீதியான படிமத்தின் மீள் உருவாக்கமா இது?

2. அங்கவீனரான பெண் போராளி தோன்றும் காட்சி. இரு கைகளையும் இழந்த பெண். அவளுக்கு உணவூட்டும் இன்னோர் பெண். "எனது கைகளை இழந்தது பற்றி கவலையில்லை, தேச விடுதலைக்காகப் போரிட்டேன், தொடர்ந்தும் என்னாலானதைச் செய்ய முயல்வேன்" என உணர்ச்சியற்ற குரலில் கூறிவிட்டு அவள் எழுந்து போகின்றாள். கமரா பின்பக்கத்திலிருந்து கைகளற்ற தோளின் மேலாகத் தொங்கும் சேட்டின் துணிக் கைகள் அசைய அவள் மெதுவாக நடந்து செல்வதைக் காட்டுகிறது. புலிகள் எதிர்பார்த்த அநுதாபத்தைக் கிளப்புவதற்கு இந்தக் காட்சி உதவும்.

கை, கால்களை இழந்து அங்கவீனரானோர் பெண்களிலும் பார்க்க ஆண்களே அதிகம். அப்படியிருக்க ஏன் ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்தனர்? தமிழ்ச் சமூகம் ஆணைப் பாதுகாவலனாகவும், சகல வலிமையும் பொருந்தியவனாகவும் எதிர்பார்க்கின்றது. பூரித்த தோள்கள் கொண்ட, உடற்குறைவும் நலிவுமற்ற ஆண் உருவம் இலட்சியபூர்வமான ஆண்மையின் சான்றாகும். அங்கவீனர்களான ஆண்கள் இந்த இலட்சியப் படிமத்துடன் பொருந்த மாட்டார்கள். அது மாத்திரமன்று, அவர்களைத் திரையில் காட்சிப்படுத்துவதை தமிழ்ச் சமூகத்தின் ஆண் கௌரவம், பெருமை சகித்துக் கொள்ளாது. ஆண் உளவியல் அதனை ஏற்காது. அதனால் பாதிக்கப் பெறும்.



ஆனால் பெண் பாவம், பேதை, எவ்வளவுதான் உயரப் பறந்தாலும் பருந்தாக முடியாத குருவி, இரக்கத்திற்கும், அநுதாபத்திற்கும் உரிய பொருளாவது மிகப் பொருத்தமானதாகவே தோன்றியிருக்கலாம். இவ் வகையில் முன்னர் நான் கூறிய புனைவுத் தாக்குதல் காட்சியும், இந்தக் காட்சியும் ஒன்றுக்கொன்று எதிர்நிலை காட்சிகளாகும். புலிகளின் கருத்துநிலை யதார்த்தத்தை நன்கு வெளிப்படுத்துவனவாகும்.

இவ் வீடியோவில் யாழ்நகரின் சில பகுதிகள் படமாக்கப்பட்டுள்ளன. இடிந்த கட்டிடங்கள், அவசரமாக விரையும் மனிதர்கள், பாடசாலை செல்லும் மாணவிகள், தாக்குதல் நடத்தும் விமானம் என்று யாழ்ப்பாணத்தின் போர்க்கால வாழ்வின் வெட்டு முகத் தோற்றத்தைக் காட்சிகளாக்கிய போது நகரின் சுவர்களில் இறந்த போராளிகளின் படங்கள் ஒட்டப்பட்டிருப்பதையும் கமரா காட்டுகின்றது. கமராவின் கண்களுக்குள் பெண்களின் படங்கள் எதுவும் அகப்படும்படியாக இல்லை. கணிசமான பெண்கள் இறந்த பின்பும் மேல்மட்டத்தில் தெரிவதெல்லாம் ஆண்களின் பிம்பங்களே.

வீடியோ நிகழ்வின் காட்சி ஒன்றில் இறந்த பெண் ஒருத்தி புதைக்கப்படுவது காட்டப்படுகின்றது. புலிகளின் வரலாறு எழுதப்படும்போது பெண்களின் உழைப்பும், பங்கும் புதையுண்டு போகுமோ?

*( இறுதிப் பகுதி அடுத்த கலத்தில். )*

- சசி. பௌலேமி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்களால் முடியும்

"என்ன செல்லம்மாக்கா, கவலையா இருக்கிறீங்கள்?" கேட்டுக் கொண்டே தவமணி வீட்டிற்குள் வந்தாள்.

"எல்லாத்தையும் நினைக்க விசர் வருகுது. பேசாமல் ஊருக்குப் போனால் பறவாயில்லைப் போல கிடக்கு"

"ஊரில சரியான சண்டை நடக்குது. அங்க போய் நீங்களும் சாகப் போறீங்களோ?"

"இங்கயிருந்து சாகிறதைவிட அங்க போய் சாகிறது மேல்"

"ஏனக்கா என்ன நடந்தது?"

"என்ன தெரியாத மாதிரிக் கேக்கிறாய். நாஸியளின்ரை அட்டகாசங்களைப் பாக்கேக்க ஊரில போய்ச் சாகிறது மேல் போல கிடக்குது. ஒவ்வொரு நாளும் எங்கயாவது ஒரு மூலையிலை அகதியளை அடிச்சோ எரிச்சோ துன்புறுத்திக் கொண்டுதானிருக்கிறாங்கள்"

"நான் முந்தியெல்லாம் இரவு பன்ரெண்டு மணிக்கும் வெளியிலை போட்டு வாறனான். இப்ப என்னடாவெண்டால் எட்டு ஒம்பது மணிக்குப் பிறகு வெளியிலை வெளிக்கிடவே பயமாக் கிடக்கு"

"ஊபானிலயும், ஸ்ராஸன்பானிலயும் போகேக்க இந்த மனிசற்றை முழி எங்களப் பாத்து பிரளுறதைப் பாத்தா விசர் வரும். முந்தியெண்டா வித்தியாசமான வித்தியாசமான பார்வையள். இப்ப அநேகமாய் எல்லாத்தின்ரை முகத்திலயும் என்ளும் கொள்ளும்தான்"

"ஓமக்கா. நீங்கள் சொல்லுறது சரிதான். இங்கத்த கவுண்மேந்துகளும் எங்களுக்கெதிராய் பிரச்சாரம் செய்யுதுகள். அகதியள் பெருகி விட்டினமாம். இங்க வாற அகதியள் எல்லாம் தங்கட நாட்டில வசதியில்லாததால வந்த பொருளாதார ஒட்டுண்ணியள் எண்டெல்லே பிரச்சாரம் செய்யிறாங்கள். எங்கட நாடுகளிலை நடக்கிற சண்டையளுக்கு தாங்கள் ஆயுத, நிதி உதவி செய்யுறதை மறைச்சு எங்கடை நாட்டில ஒண்டுமில்லாததாலயே நாங்கள் இங்க வாறமெண்டு சொல்லுறாங்கள். இங்கயிருக்கிற வேலையில்லாத் திண்டாட்டம், வீடெடுக்கேலாத நிலை, கிறிமினல்கள் எல்லாத்திற்கும் வெளிநாட்டவங்கள் மேல பழியைப் போட்டு தங்களைக் காப்பாத்திக் கொள்ளுறாங்கள்"

"பில்ட் சைற்றுங்கும், ரீ.வி.யும்தான் வாழ்க்கையா இருக்கும் அதிகமான ஜேர்மனியர்களுக்கு இவர்களின் பொய்ப் பிரச்சாரங்களை நம்புவதைவிட வேற வழியில்லை. நிறவெறி பிடித்த இந்த நாடுகளால எமக்கு எப்பவும் பிரச்சினைதான். முந்தி கப்பலில வெளிக்கிட்டு எங்கட நாடுகளைக் கொள்ளையடிக்கிறதுக்கு யாற்றை அனுமதியும் இவைக்குத் தேவைப்படேல. அந்த நாட்டுச் சனங்களை மில்லியன் கணக்கில கொண்டதைப் பற்றி எவருக்கும் அக்கறையில்லை"

"இங்கயிருக்கிற ராட்சசர்களுக்கு எதிராயும், இவங்களுக்கு எங்கடை நாடுகளை விற்றுக் கொண்டிருக்கிற ராட்சசர்களுக்கு எதிராயும் போராடாம ஒண்டும் செய்யேலாது"

"ஓம். என்னோட வேலை செய்யிற ஜேர்மன் பெடியன் எனக்குச் சொல்லுறான் இங்க நடக்கிறது நிறவாதப் பிரச்சினையில்லையாம். இங்கயிருக்கிற சனத்துக்கு எங்களைக் கண்டால் பயமாயிருக்காம். எனக்குப் பத்திக் கொண்டு வந்திது. உங்கட நாட்டைக் கட்டியெழுப்ப அடிமைகளைக் கொண்டு வரேக்க உங்களுக்கு ஒரு பயமும் வரேலையோ எண்டு கேட்டன். இது நிறவாதப் பிரச்சினையில்லை எண்டால் பிரான்சுக்காறறிலையோ, லண்டன்காறறிலையோ உங்களுக்கு வராத பயம் எங்களைக் கண்டால் மட்டும் ஏன் வருகுது எண்டு கேட்டன். பெடியன் ஒண்டும் சொல்லேலாமப் போட்டான். உவங்களுக்குச் சரியாய் குடுக்காட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள மட்டம் தட்டிப் போடு வாங்கள். இது என்ரை அனுபவம்"

"நாலியளுக்கு எதிராய் நாங்களும் ஒரு குழு அமைச்சு எங்கடை ஆட்களை இதிலை நிறையச் சேர்க்க வேணும். லாகறிலை இருக்கிறவை எப்பவும் தற்பாது காப்போட இருக்க வேணும். கயித்தேணி அல்லது ஏதாவது ஓடித் தப்பிற மாதிரியான ஆயத்தங்கள் செய்யிறது நல்லது. வெளியிலை போகேக்க கண்ணீர்ப் புகை ஸ்பிறே கொண்டு திரியிறது நல்லது. இவ்வளவு தூரம் வந்து இங்க சாகமுடியாது"

இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும்போது செல்லம்மாவிற்கு மூன்று முடிச்சுப் போட்டவர் வீட்டிற்குள் நுழைந்தார்.

"என்ன திரும்பவும் பெண்கள் மாகாநாடு கூடிவிட்டியளே. எனக்குப் பசிக்குதப்பா. சாப்பாட்டைப் போடும். பெட்டைக் கோழி கூவி விடியப் போறதில்லை. இதைத் தெரிஞ்சுகொண்டும் ஏன் இப்பிடி நேரத்தை அநியாயமாக்குகிறியள்"

"நாங்கள் ஏதாவது கதைக்கத் தொடங்கினாலே உங்களுக்குப் பொறுக்க முடியாமல் கிடக்கு. இப்பிடியான உங்கட கதையளுக்கெல்லாம் காது கொடுத்த காலம் இப்ப இல்லையப்பா. நானும் உங்களைப் போலத்தான் வேலைக்குப் போட்டு வந்து சாப்பாடும் சமைச்சு வைச்சிருக்கிறன். பசிச்

( *தொடர்ச்சி38ஆம் பக்கம்* )

*"நாங்கள் அரசோட கூட்டுச் சேர்ந்தாலும், கூலி வாங்கினாலும், நாங்கள் இன்டைக்கு என்ன கலர் சேட்டு போடலாம் என்டெல்லாம் முடிவெடுக்கிற சுதந்திரம் எங்களிட்டைதான் இருக்கு"*

*- இன்னன்னா*





# அகதிகள்



குளிர் இறங்க கார்கால மேகம்
மெல்லத் துமிக்கும்.
உறங்கி விழித்தெழும் சிசுப் போல்
பனிக்கால மரங்களில் தளிர்கள் எழும்.
இருப்புகளில் இருந்து வெளிக்கிளம்பி
இறகுகளை விரித்து உடல் உலுப்பி
இலைதளிர்காலக் கரையில் கால்கள் பதித்து
ஏதேதோ உரைக்கும் குருவிகள்.

நெஞ்சப் பரப்பைத் திறந்து காற்று வாங்கி
வாகனப் புழுதிக்குள்ளும், தெருவோர நீர் சகதிக்குள்ளும்
ஓரங்கட்டி நனைந்த பாதணிகளைத் தட்டி
மீளும் போழ்தினில்
குளிர் மட்டுமே குறைந்திருந்தது.

"பொதிகள் இறக்கப்படும்"
என்ற நம்பிக்கையோடு
தலைப்பாரத்துடனும், மனச்சுமையுடனும்
நடந்து செல்லப் பழகிவிட்டோம்.

*

பா.அ.ஜெயகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜனின் குறிப்புகள் பற்றி...

"தேசத்தின் குறிப்புகள்" குறித்து நடராஜன் அவர்கள் எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தொடர்பான ஒரு எதிர் வினையே இங்கே எழுதப்படுகிறது. "நூறு பூக்கள்" பகுதியில் வெளிவரும் விமர்சனங்களை "நூறு பூக்கள்" பகுதியிலேயே எதிர்கொள்வது நடராஜனே சுட்டிக்காட்டியபடி பிற முக்கிய விடயங்களை "தே.குறிப்புகளில்" கவனிக்க உதவியாக இருக்கும் என்று நம்புவதால் இது தனியாக எழுதப்படுகிறது.

எமது குறிப்புகள் தொடர்பான நடராஜன் அவர்களது கருத்துகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, குறிப்புகள் அல்லது பிரசைகள் தொடர்பான அவரது அபிப்பிராயம். அலட்டல், பக்கத்தை வீணாக்கல், புலிகளின் பிரச்சாரப் பீரங்கியாகத் தொழிற்படல், ஒன்றரைக் கண்ணால் பார்த்தல், 60,000 சிங்கள மக்கள் கொல்லப்பட்டதை எழுதாமை, பேதி மருந்து கொடுத்தல்... போன்றவை இப் பிரிவுக்குள் அடங்கும். இரண்டாவது, குறிப்புகளில் வெளிவந்த கருத்துகள் தொடர்பான அபிப்பிராயம். புலிகள் நடத்தும் யுத்தம் அதன் தலைமைக்காக நடக்கிற யுத்தமே, விடுதலைப் போராட்ட அலைகள் செய்தது முழுக்க முழுக்க இனவாதத்தை வளர்த்து விட்டது, முழுச் சிங்கள மக்களையும் எதிரிகளாக காட்டி நின்றது, போராட்டம் இனங்களின் ஐக்கியத்தை வலியுறுத்துவதாக அமைய வேண்டும்,



'பாட்டாளி வர்க்கம்' பற்றிய பிரசைகளின் கருத்து அப்பட்டமான குட்டி முதலாளியக் கருத்தாகும்.. என்பன இப் பிரிவுக்குள் அடங்கும்.

இதில் முதலாவது பகுதியில் உள்ளடக்கிய விடயங்களுக்குப் பதிலளிப்பது முக்கியமானது அல்ல. ஏனென்றால் அவற்றில் உண்மை உண்டா இல்லையா என்பதை தூண்டிலும், தேசத்தின் குறிப்புகளைத் தொடர்ந்து வாசித்து வருபவர்களும் தீர்மானித்துக் கொள்ள விட்டு விடலாம் என்று நினைக்கின்றோம். இரண்டாவது பகுதியிலுள்ள விமர்சனங்களை மட்டும் இங்கே கருத்துக்கு எடுத்துக் கொள்வோம்.

நடராஜன் அவர்கள் பிரசைகள் சொல்வதாகப் பல விடயங்களைக் குறிப்பிடுகிறார். முடிவாக புலிகளின் இன்றைய யுத்தம் வெறும் 'சமரச அழைப்புக்கான யுத்தம் 'தான் என்று முடிவு சொல்கிறார். அதை அழிவு யுத்தம்தான் என்று அடித்துக் குறிப்பிடுகிறார். 'மனிதம்' இல.15இல் கரிகாலன் குறிப்பிட்டது போல தனது சொந்த இராணுவ அமைப்பைப் பாதுகாப்பதற்கான யுத்தம் என்று இவர் சொல்லாவிட்டாலும் இவரது கருத்துகள் விளக்க முனைவது அதனையே.

ஆனால் நாங்கள் திரும்பவும் சொல்வது இதைத்தான்: புலிகளின் தடுப்பு யுத்தம் நடராஜன் சொல்கிற சமரச அழைப்புக்கான யுத்தம் என்பதை நாம் நிராகரிக்கவில்லை. இது பற்றித் தெளிவாகப் பலதடவைகள் எழுதியுள்ளோம். யுத்தம் தடுப்பு யுத்தமாக நீடிப்பதே அது ஒருவகை 'சமரசத்தைக்' கோருவதாகக் காட்டுகிறது . புலிகளின் அரசியல் முன் முயற்சி இப் போராட்டத்தை தடுப்பு யுத்தம் என்ற கட்டத்திற்கு அப்பால் நகர்த்த முடியாமலுள்ளதும், சமரசத்திற்குப் புலி தயாராக இருந்தபோதும் அரசு புலிகள் எதிர்பார்ப்பதை வழங்க முடியாமல் இருப்பதும்தான் தடுப்பு யுத்த நீடிப்புக்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளோம். புலிகளது யுத்த நடவடிக்கைகள் தொடர்பாக நாம் எழுதி வந்தவை தேக்கத்திற்கான காரணம் அவர்களது அரசியல் வழியில் உள்ளதென்பதை வலியுறுத்தவே அன்றி அவர்களுக்குப் 'பிரச்சாரப் பீரங்கியாக இருக்கவோ, 'போதனை' செய்யவோ அல்ல.

சரியான அரசியல் வழியை நோக்கி நகரவேண்டிய சக்திகள் புரிந்தகொள்ள வேண்டியது புலிகளின் அரசியல் வழியிலுள்ள கோளாறு காரணமாகவே எமது போராட்டம் தேக்கத்திற்குள்ளாகியுள்ளதே அன்றி வேறு காரணங்களுக்காக அல்ல என்பதை வலியு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுத்துவதே எமது நோக்கமாக இருந்தது. `தேசிய விடுதலைக்காகப் போராடுவதே ' தவறு என்றும், `ஆயுதம் தூக்கியது தவறு ' என்றும் , சிங்கள இனவாதம் `வெடிப்புற்றுக் கிடப்பதால் அதைப் பயன்படுத்தி முன்னேற முடியும் என்றும் கருத்துக் கூறுபவர்களிடையே இப்படி வலியுறுத்துவது ஒரு அவசியத் தேவையாக இருந்தது.

அதுமட்டுமன்றி , நடக்கின்ற யுத்தம் தேவையற்றது , அரசின் மீது நிர்ப்பந்திக்கப்பட்டது, புலிகள் என்றொரு அமைப்பு இன்று யுத்தத்தை நடத்தாவிட்டால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசு தீர்த்துவிடும், எனவே இன்று நடக்கின்ற யுத்தம் வெறும் அழிவுக்கான வெற்று யுத்தமே என்ற கருத்தும் , இப்போது புதிதாக `தனது சொந்த இராணுவ அமைப்பைப் பாதுகாத்துக் கொள்ளவே' நடத்துகிற யுத்தம் என்றும் பேசப்படுகின்ற ஒரு கருத்துச்சூழலில் புலி பற்றிய மதிப்பீடும் , இன்றைய யுத்தம் பற்றிய மதிப்பீடும் அவசியமாக உள்ளது.

மதிப்பீடு என்பது காய்தல், உவத்தல் இன்றி உண்மைகளை தரிசிக்கத் தயாரான மனநிலையில் செய்யப்பட வேண்டியது. பல பரிமாணங்களைக் கொண்ட ஒரு பொருளில் ஒரு பரிமாணம் பிடிக்காதது என்பதால் அதன் மறு பரிமாணமும் நிராகரிக்கப்பட வேண்டியது என்பது சரியான அணுகுமுறையல்ல. இது கடந்தகால

"வெளியில இருந்து காசு வருமதி இருக்கு. வேண்ட என்ன செய்யலாம்?"

"பிள்ளையின்ரை பிறந்தநாளை எல்லாருக்கும் சொல்லிப் பெரிசா கொண்டாடுவம்"

— இன்னன்னா





இலக்கிய `விமர்சகப் பிதாமகர்கள்' நல்ல படைப்பாளிகளை நிராகரித்து தம்மாட்களுக்கு மகுடம் சூட்டி மகிழ்ந்த அற்பத்தனமான குழு வாதத்திற்கு ஒப்பானதாகும்.

புலிகளின் தோல்வி பற்றிப் பேசுகையில் இன்னொரு அம்சமென சுட்டிக் காட்டப்பட்ட `ஐக்கிய முன்னணி ' அடுத்த பிரச்சினையாக வந்துள்ளது. தேசிய விடுதலை யுத்தத்தின் தோல்விக்கு `போராடும் சக்திகளிடையேயான ஐக்கியம்' வலியுறுத்தப்படாமை ஒரு காரணம் என நாம் சொல்லப்போக, அது ஐக்கிய முன்னணிகளின் தோல்வி, புலிகளின் குணம் என்பனவற்றைக் காரணம் காட்டி நிராகரிக்கப்படுகிறது. உண்மையில் நடராஜன் பார்த்திருக்க வேண்டிய விடயம் ஒரு சரியான ஐக்கிய முன்னணி கட்டப்படாமல் போனதற்குக் காரணம் என்ன? உண்மையான ஐக்கிய முன்னணி எப்படி அமைந்திருக்க வேண்டும்? பழைய கூட்டின் அரசியல் அம்சம் என்ன? அது ஏன் உடைந்தது? என்பனவே. ஆனால் அவர் புலிக்கு `ஐடியா'க் கொடுப்பதாகப் பார்த்து அங்கே ஒரு முக்கியமான விடயம் இருப்பதையே கவனிக்க மறந்துவிடுகிறார். `ஐக்கிய முன்னணியை' வலியுறுத்திப் பேசுவது தோல்வியின் காரணத்தை விளங்கிக் கொள்ளவும் , எதிர்காலத்தில் எப்படி அது அமையவேண்டும் என்பதையும் விவாதிக்கவே. எங்களின் குறிப்புகளைப் படித்துவிட்டுப் புலிகள் திருந்திக் கொள்வார்கள் என்ற கற்பனையோ, கனவோ எமக்குக் கிடையாது. திருந்திக் கொள்வதல்ல, விவாதித்து சரியானதைக் கண்டுகொள்ள மூன்றாவது பாதைக்கான சக்திகள் திரள வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

இயக்க மோதல்களுக்கும், புலிகளின் படு கொலைகளுக்கும் அன்றைய கூட்டின் உடைவுக்கும் `ஐக்கிய முன்னணி' தேவையல்ல என்ற முடிவை ஒருவர் வந்தடைவது நடராஜனின் வார்த்தையிலேயே சொல்வதானால் இது `தொலைநோக்கான பார்வையுள்ள ஒரு ஆள் கதைக்கிற கதையில்லை'

புலிகள் `தமது அதிகாரத்தை' `தமது சொந்த நலனை' காப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர்கள் என்றால் அந்த `தமது', `சொந்த' நலன்கள் எவை? அவை கரிகாலன் மனிதத்தில் சொல்கிற படி `தமிழ் மக்களைச் சுரண்டுவதில்' ஏகபோக உரிமை பாராட்டும் நலன் என்றால் அந்த நலன்கள் எவை? அவற்றை நாம் முதலாளித்துவ தேசியவாதத்தின் நலன்கள் என்கிறோம். முதலாளித்துவ தேசியவாதத்தின் நலன்கள் என்றவுடன் கட்டாயம் அவர்களிடம் முதலாளித்துவ சனநாயகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நீ பூகோளத்தில பேய்க் கெட்டிக் காரனெல்லே. இப்ப என்ன வேலை செய்யிறாய்?"

"வெளிநாட்டுக்கு ஆக்களை அனுப் புற ஏஜென்சி வேலை செய்யிறன்"

– இன்னாள்ளா

இருக்கும் என்று இவர்கள் கூறு கிறார்கள். மு தலாளித்துவ அர சில் கிடைக்கிற 'சனனாயகத்தை' போராடும் முதலாளித்துவ தேசிய வாதத்திடம் எதிர்பார்ப்பது வியப் புத்தான். ஆனால் இன்று ஓரளவு க்கு தமது 'கட்டுப்பாட்டிலுள்ள' பகுதிகளில் புலிகள் இவர்கள் எதிர்பார்க்கும் 'சனனாயகத்தை' உருவாக்கி வருகிறார்கள்! அதன் அறிகுறிதான் 'நீதிமன்றம்', 'பொலிஸ்', 'சிறைச்சாலை' என் பன!! இவை இன்னும் கொஞ்சம் மெருகு பெறும்போது இந்தப் 'புலிக்குணம்' எது என்று தெளிவு படும் என நினைக்கிறோம்.

ஒரு உண்மை இங்கு கவனிக் கப்பட வேண்டும். 'முதலாளித்துவ சனனாயகம்' அரசியல் உரிமையை வழங்குவதற்காக இவைகளை இப்போது உருவாக்கவில்லை. இப்போது உருவாக்கியிருப்பது சாதாரண குற்றங்களுக்காகவே!

தேசிய விடுதலைப் போராட் டம் சாதித்தது வெறும் இனவா தத்தை வளர்த்துவிட்டதும், சிங் கள மக்களைப் பொது எதிரியா கக் காட்டியதும் தான் என்பது அடுத்த பிரச்சினை.

இன்று புதிதாகத் தோன்றி யுள்ள விடயமல்ல இது என்ற போதும், இத்தகைய கருத்துகள் எழுந்து வருகின்ற பின்னணி தேசிய விடுதலைப் போராட்டம் 'இன ஐக்கியத்தைக் குலைக்கும் ஒன்று என்பதே. நடராஜன் சுட் டிக் காட்டுகிற விடயங்கள் எமது



கடந்தகால போராட்ட வரலாற் றின்போது நடந்தும் இருக்கின் றன என்பது உண்மைதான் என்ற போதும் இவையெல்லாம் எமது போராட்டத்தின் தோல்விக்கான காரணங்கள் ஆகின்றனவே ஒழிய போராட்டம் தேவையற்றது என்று கூறவோ, 'ஐக்கியமே வழி' என்று சாதிக்கவோ போதுமான காரணங்கள் அல்ல.

தேசத்தின் விடுதலைக்காகப் போராடுவது என்பது பிற்போக் கானது, பாட்டாளி வர்க்க நலனு க்கு முரணானது என்ற அபிப்பி ராயம் பலரிடம் நிலவுகிறது. ஆனால் இவர்கள் கவனிக்கத் தவறுகிற முக்கியமான அம்சம் என்னவென்றால், ஐக்கியம் என் பது எப்படிச் சாத்தியம் என்ப தைக் கவனத்திலெடுக்க வேண் டும் என்பதையே. ஐக்கியம் என் பது நாம் போராட்டத்தை நடத் தாமலே சாத்தியம் என்று அப்பா வித்தனமாக நம்பவதற்கு எவருக் கும் பூரண சுதந்திரம் உண்டு. ஆனால் அது யதார்த்தம் இல்லை. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரி மையை சிங்கள மக்கள் அங்கீகரி க்கிற நிலை தோன்றாதவரை; தேசிய விடுதலைக்காக போராடு கிற உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என்பதை அங்கீகரிக்காத வரை ஐக்கியம் என்பது சாத்திய மில்லை என்பதை இவர்கள் புரி ந்து கொள்வதில்லை! ஒடுக்கும் தேசிய இனம் என்று கூறுவதே 'இனவாதம்', 'சிங்கள மக்களுக்கு எதிரானது' என்று பார்ப்பது தவறாகும். சிங்கள மக்களை மட் டுமல்ல, இத்தகைய பதங்கள் பாவிக்கப்படுகையில் அது அப் போக்கைப் பிரதிநிதித்துவப்படுத் துபவர்களையே பாதிக்கும் என்று புரிந்துகொள்ளத் தவறினால் ஏகா திபத்தியங்களைப் பற்றிக் குறிப் பிடும்போது அப்பாவி அமெரிக்க மக்களையும், ஜேர்மனியர்களை யும் இட்டு நாம் தடுமாற வேண்டி வரும். ஒடுக்கும் தேசிய இனத் தைச் சேர்ந்த ஒவ்வொரு சிங்கள வரினதும் கடமை அப் பழியிலிரு ந்து விடுபட தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காகக் குரலெ ழுப்புவதேயாகும். மாறாக அவர் களுடன் முரண்பட விரும்பாத எமது நல்லியல்பு காரணமாக முரண்படாத நாம் பேண விரும் பும் 'ஐக்கியம்' உண்மையில் தமி ழ்த் தேசிய இனத்தினை ஒடுக்க ஒப்புக் கொடுப்பதேயாகும். இதை த்தான் முன்னாள் 'பாரம்பரிய இடதுசாரிகள்' செய்தார்கள்!

நடராஜனுக்கு வருவோம். முழு இலங்கையிலும் வாழ்கிற தொழிலாளர்களது ஐக்கியம் பற் றியும், அவர்களது ஐக்கியப்பட்ட போராட்டத்தின் மூலமாக இன ஐக்கியமும், பொது எதிரி தூக்கி யெறியப்படுவதும் சாத்தியம் என்று அவர் நம்புகிறார். அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை நியாயமானது. ஆனால் அந்த ஐக்கியம் `தேசிய இன அங்கீகாரத்தை' வழங்காத வரை சாத்தியமில்லை என்பதும், அதற்கு ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனம் செய்யக்கூடிய ஒரே வேலை அதற்காகப் போராடுவதுதான் என்பதையும் மறந்துவிடுகிறார்.

போகிற போக்கில் தேசிய விடுதலையை ஆதரிப்பவர்கள் ஐக்கியத்திற்கு எதிரானவர்கள் என்ற தொனியும் வெளிப்படுகிறது. உண்மையில் தேசிய விடுதலைக்காகப் போராடுபவர்களே தேசிய இனங்களுக்கிடையில் உண்மையான ஐக்கியத்தைக் கொணர முடியும். ஒடுக்கும் தேசிய இனமும் , ஒடுக்கப்படும் தேசிய இனமும் ஐக்கியமாக வாழ்வது பரஸ்பர சமத்துவத்தின் பேரிலேயே அன்றி வேறல்ல. இதைப் புரிந்துகொள்ள மறுப்பதாலேயே பலர் இக் கருத்தைத் தெரிவிக்கின்றனர். நடராஜனிடம் காணப்படுகின்ற சந்தேகமும் இதுவேதான். இலங்கையின் சனனாயகப் புரட்சிக்கு இது ஒரு முன் நிபந்தனை என்பதை ஆழ்ந்து கவனித்தால் நடராஜனால் புரிந்துகொள்ளமுடியும்.

மூன்றாவது பிரச்சினை `சமர்' உக்குப் பதிலளிக்கையில் நாம் குறிப்பிட்ட `மார்க்ஸிய நூல்களில் குறிப்பிடப்படும் பாட்டாளி வர்க்கம்' பற்றியது. இக் கருத்து சொல்லப்பட்ட இடத்தைப் புரிந்து கொண்டால் விடயம் தெளிவாகப் புரிந்துவிடும்.

*"அரசாங்கம் மாதிரி நாங்களும் உலக வங்கியிட்ட பிச்சை கேக்கலாம்தானே?"*

*"உலக வங்கிக்குக் குடுக்க அரசிட்டை நாடு இருக்கு. எங்களிட்ட கோவணம் மட்டும்தானே இருக்கு"*

*- இன்னன்னா*





மார்க்ஸிய மூலவர்கள் குறிப்பிடுகிற பாட்டாளி வர்க்கம் என்பது Proletariat என்ற சொல்லுக்கான தமிழாக்கமாகவே பழக்கத்தில் உள்ளது. உண்மையில் இது `ஆலைத்துறைப் பாட்டாளி வர்க்கம்' என்றே சொல்லப்பட வேண்டும். முதலாளித்துவ தொழிற்துறையில் உருவாகி வந்த புதிய வர்க்கமான ஆலைத்துறைப் பாட்டாளி வர்க்கம் நாம் குறிப்பிடும் எமது நாட்டிலுள்ள கூலி விவசாயிகளைக் குறிப்பிடப் பொருத்தமான பதமாக இருக்காது. ஏனென்றால் முன்னவர்களைப் போலல்லாது இவர்கள் பின்தங்கிய – முதலாளியத்திற்கு முந்திய – உற்பத்தியில் ஈடுபடுகிற உழைப்பாளிகள். பொதுப்பண்பாக இருவரிடமுமே உழைப்பை விற்பது என்ற அம்சம் இருந்தபோதும் நவீன முதலாளிய உற்பத்தி முறைக்கே உரிய சிறப்பியல்புகள் அற்ற காரணத்தால், அவர்களைப்போல முன்னேறிய, வரலாற்றினை முன் கொண்டு செல்லலில் தலைமை தாங்குமளவிற்கு முன்னேறிய வர்க்கமாக இல்லை. அத்துடன் வடக்கு, கிழக்கின் தொழிற்துறையும் தெளிவானதே. எனவேதான் இதை நாம் குறிப்பிட்டோம். இந்தத் தொழிலான, விவசாயிகளின் புரட்சிகரப் பாத்திரத்தை மறுதலிப்பது எமது நோக்கமாக இருக்கவில்லை. இவர்களது புரட்சிகரப் பாத்திரம் வலுப்பெற பாட்டாளி வர்க்க அரசியற் தலைமையையும், அந்தச் சிந்தனைப் போக்கின் அவசியத்தையும் அதே இடத்தில் நாம் வலியுறுத்தினோம். ஆனால் நடராஜன் இதை கவனிக்கவில்லை.

இதையே `உயிர்ப்பு`ம் தன் போக்குக்குப் புரிந்துகொண்டு நாம் சொல்லாததைச் சொன்னதாகச் சாதித்திருக்கிறது. `மார்க்ஸ் பிறக்க முதலே மார்க்ஸிஸம் வந்துவிட்டதாக' நாம் கூறியதாகவும், தேசிய முதலாளித்துவம் இல்லாமலே தேசிய முதலாளிய சிந்தனை தோன்றலாம் என்பதை மார்க்ஸியத்திற்கு முரணான `அகநிலைவாத`க் கண்ணோட்டம் என்றும் சொல்கிறது. எதையுமே உறுதியாகத் தெரிவிக்காது எழுதியுள்ள `உயிர்ப்பு' நாம் ஆதாரங்களை தரவில்லை என்று குறை கூறுகிறது.

*( இறுதிப் பகுதி அடுத்த கலத்தில் )*

– பிரஜைகள் (ஈழம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அடுத்த அரை மணி த்தியாலத்திற்குள் அந்த இடத்தைவிட்டு அடுத்த ஊரிலுள்ள கோயிலுக்கு எல்லோரும் போய்விட வேண்டும், தாக்குதல் நடைபெறப் போகிறது என்று தமிழில் எழுதப்பட்ட நோட்டீஸ்களைப் பறக்க விட்டுவிட்டு இராணுவ ஹெலி போய்விட்டது.

எதிர்பார்த்திருந்தாலும் அந்த நேரத்திற்குரிய பதட்டம் எல்லோருக்கும் வரத்தான் செய்தது.

உயிர் தப்புவதற்கு இன்னும் முப்பது நிமிடங்கள்!

வாழ வேண்டுமானால் ஓட வேண்டும்.

ஓடினால்தான் தப்பலாம்.

தப்பபலாமா?

வாழலாமா?

வீட்டில் இருக்கும் பொருட்களை எப்படிச் சுமப்பது? குழந்தை குட்டிகளை எப்படித் தூக்குவது? வருத்தக்காறரை எப்படிக் கொண்டு போவது? வயதானதுகள் ஓடிவருமா?

கேள்வி கேட்டுக் கொண்டிருக்க நேரமில்லை.

உயிர் தப்ப இன்னும் இருபத்தைந்து நிமிடங்கள்!

"அம்மா எழும்பணை" மீனா தாயை உசுப்பினாள். விசாலம் சுருண்டு போய் தரையில் கிடந்தாள். வாயில் எச்சில் வழிந்தது.

"எல்லாரும் ஓடுகினம். எழும்புங்கோ"

விசாலத்திற்கும் எழும்ப விருப்பந்தான். முடியவில்லை. உடம்பு மிகவும் பலவீனமாயிருந்தது.

"அம்மா"

மீனா தாயின் தோளைப் பிடித்துத் தூக்கி சுவருடன் சாத்தினாள். அம்மாவை எப்படிக் கொண்டு போவது?

இன்னும் இருபது நிமிடங் கள்.

வெளியே ஆட்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள். பதட்ட ஒலி. மண் அள்ளித் திட்டல்கள். குழந்தைகளின் கத்தல்.

"கட்டாயம் வந்து அடிப்பாங்களோ?"

"எங்களை வெருட்டி ஓட வைக்கத்தான் நோட்டீஸ் போட்டாங்களோ?"

"சொன்ன நேரத்துக்கு முதலே வந்து அடிச்சாலும் அடிப்பாங்கள்"

"கோயிலுக்கு போகச் சொல்லுறாங்கள். அங்க மட்டும் வந்து தாக்க மாட்டாங்கள் எண்டு என்ன நிச்சயம்?"

"அடிச்சாலும் அடிப்பாங்கள். போன கிழமை துர்க்கையம்மன் கோயிலுக்கு பொம் போட்டவங்கள்"

"துலைவாங்கள். கேக்க ஆளில்லையெண்ட நினைப்பு"

"கேக்க ஆளில்லைத்தானே"

"அப்ப எங்கதான் ஓடுறது?"

இன்னும் பதினைந்து நிமிடங்கள்!

ஊர் மெல்ல மெல்லக் காலியாகிக் கொண்டிருந்தது. மீனா ஒரு மாதிரி தாயைத் தன்னுடன் அணைத்தபடி எல்லோரும் ஓடும் திசை நோக்கி மெதுவாக நடந்தாள்.

ஓடிக்கொண்டே எல்லோரும் அடிக்கடி வானத்தையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொண்டார்கள். காகம் பறந்தால்கூட நெஞ்சு திடுக்கிட்டது. எந்த ஒரு இரைச்சலையும் கிரகித்துக் கொள்ள காதுகள் விழிப்பாயிருந்தன.

இன்னும் பத்து நிமிடங்கள்!

"அம்மா நடக்க ஏலுதே?"

"மூ..ச்..சு..வா..ங்..கு..து.." விசாலத்தால் மனசார முடியவில்லைத்தான். மிகவும் பிரயத்தனப்பட்டான்.

யாரை உதவி கேக்கலாம் என்று மீனா அங்குமிங்கும் பார்த்தான். எல்லோருமே சுமைகளுடன்தான். யாருக்கு யார் உதவுவது? அவரவர் அவரவரைப் பார்ப்பதைத் தவிர வழியில்லல.

எங்கே?

சனங்கள் எங்கே?

தப்பிப்பது எங்கே?

"சீனச் சகடை வருகுது" யாரோ கூச்சல் போட்டார்கள். அவதானித்தபோது அந்த இரைச்சல் கேட்டது.

"ஒடுங்கோ"

ஓட்டம். திசை தெரியாத ஓட்டம். வெளி எல்லாம் எதிரியானது. குண்டும், குழியுமான றோட்டு தடக்கி விழுத்தியது. றோட்டைத் திட்டுவதா? ஆகாயத்தைத் திட்டுவதா?

"ஓடுங்கோ"

தூரத்திலிருந்தே குண்டுகள் போட்டபடி விமானங்கள் வானத்தில் மிதந்தன. காதைச் செவிடாக்கும் சத்தம். தலைசுற்ற வைக்கும் கரும்புகை. மின்னல்கள்.

கோயிலுக்குள் போக முடியாதவர்கள் எல்லோரும் மரங்களுக்குக் கீழ் தரையோடு படுத்தார்கள். தலைக்குக் கூரை தேடினார்கள்.

மீனாவும் தாயை மரமொன்றுக்கு அழைத்துச் சென்றாள். முட்கள், போத்தில் ஓடுகள், நாய்ப்பீ.. சுத்தம் செய்ய நேரமில்லை. மேலே ஆபத்து. தாயைக் கிடத்தினாள். "அம்மா" விசாலத்திடமிருந்து முனகல். முள்ளு குத்தியிருக்குமா? போத்திலோடு கீறியிருக்குமா? ஆராய முடியாது. தலைக்கு மேலே ஆபத்து.

"ஐயோ..."



"ஐயோ..."

விமானங்கள் மிகத் தாழ்வாகப் பறந்து குண்டுகள் பீய்ச்சின. விமானப்படைக்குத் தெரியும் கஷ்டப்பட்டால்தான் சனத்தைக் கொல்ல முடியுமென்று. அவர்கள் உத்தியோகம் அது. கொன்றால்தான் பதவியுயர்வு. கூலி. கொல்லக் கூடியவர்களைக் கொன்றுவிடுங்கள் என்பது கட்டளை.

மீனா வியர்த்துப் போயிருந்தாள். இன்று மட்டும் புதிதாக ஓடவில்லைத்தான். ஆனாலும் ஒவ்வொருமுறையும் பயம் வந்து தொலைக்கிறது. எவ்வளவு காலந்தான் உயிர் கையிலிருக்கும்?

அம்மாவைப் பார்த்தாள். அழுகை வந்தது. முதிர்ச்சி. களைப்பு. இயலாமை. அம்மா அவளுக்காக ஓடவில்லை. எனக்காகத்தான். எனக்கு யாருமில்லை என்பதால்தான். என்னை விட்டுவிட்டு போய்விடக் கூடாதென்பதால்தான்... நினைத்துப் பார்க்கையில் மீனாவுக்குத் தொண்டை அடைத்தது. மஞ்சு ஞாபகம் வந்தது. எல்லாவற்றிற்கும் சேர்த்து சத்தம் வராமல் அழு தாள்.

விமானங்கள் மறைந்தன. பிறகும் வந்தன. குண்டுகள் போட்டன. மீண்டும்....

நெஞ்சைப் பிழியும் கதறல்கள். குழந்தைகளின் அழுகை. காயம்பட்டவர்களின் வேதனை ஓலம்...

செத்தவர்கள், காயம்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்கு இன்னும் நேரம் வரவில்லை. கொஞ்சம் அசைந்தாலும் சீனத்து விமானங்கள் மோப்பம் பிடித்துவிடும்.

மீனா உடம்பை அசைக்காமல் தலையை மட்டும் சிறிது திருப்பியபோதுதான் அதைக் கண்டாள்.

கறுப்புப் பொருள் ஒன்று மிக வேகமாகக் கீழிறங்கிக் கொண்டிருந்தது.

குண்டுதான் என்பதை
அறிவதற்குள்...
அடுத்ததை
யோசிப்பதற்குள்...

வெடித்துவிட்டது.

"ஐயோ...."

*(இன்னும் வரும்)*

* பார்த்திபன் *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகு சொறியலும், ஞானப்பாலும் !!!

"கனவான்களுக்கு (!) ஓர் கடிதம்" என்ற தலைப்பில் வி.நடராஜன் எழுதியுள்ள விமர்சனம் தொடர்பாக எங்கள் கருத்து:

3. புலி எதிர்ப்பாளர்களில் இரு வகையினர். புலியை எதிர்த்துக் கொண்டு ஏனைய இயக்கங்களை ஆதரிப்பவர்கள் ஒரு வகை. புலி உட்பட அனைத்து பாசிச இயக்கத் தலைமைகளையும் எதிர்ப்பவர்கள் இரண்டாவது வகை. இவ்விரண்டாவது வகையிலும் 2 பிரிவினர். சம காலச் சூழலில் புலியின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்து அவற்றினடிப்படையில் புலியின் மக்கள் விரோதச் செயற்பாடுகளை எதிர்ப்பவர்கள் ஒரு பிரிவு. புலி எதனைச் செய்தாலும் செய்வது புலி என்ற அடிப்படையில் எந்தவித மதிப்பீடுமின்றி எதிர்ப்பவர்கள் இரண்டாவது பிரிவினர். இந்த இரண்டாவது பிரிவினரும் கருத்துச் 'சுதந்திரத்தை' வலியுறுத்தினாலும், புலி பற்றி தாங்கள் கொண்டிருக்கும் எதிர்ப்பின் அடிப்படையில் ஒரு வரையறை செய்து கொண்டுள்ளார்கள். இவர்களையே நாம் குறிப்பிட்டோம்.

இதற்கான ஆதாரங்கள் எதையும் தூண்டிலில் இதுவரையும் காணவில்லை என்று குறிப்பிடுகிறார் நடராஜன்.

ராஜீவ் கொலை பற்றிய எமது தலையங்கம், தேசத்தின் குறிப்புகள் என்பவற்றின் மீது பல விமர்சனங்கள் கடிதங்கள், தொலைபேசி மூலமாகவும், நேரிலும் வைக்கப்பட்டன. ராஜீவைக் கொலை செய்தது புலிகள்தான், ஆகவே இக் கொலையைக் கண்டிக்க வேண்டும், இல்லையேல் தான் தூண்டிலை விநியோகம் செய்வதை நிறுத்தி விடுவேன் என்று ஒரு வாச கர் கூறினார்.



இது பற்றி கலம் 45இல் (செப்ரெம்பர்' 91) வாசகர் கடிதங்களுக்கான பதிலில் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தோம். கலம் 40இல் (ஏப்ரல்'91) பிரசுரமான வாசகர் கடிதத்தில், உங்கள் கருத்தைச் சொல்லுங்கள் அல்லது தேசத்தின் குறிப்புகளை நிறுத்துங்கள் என்று வாசகரொருவர் எழுதியிருந்தார். அண்டைய நாடொன்றில் தூண்டிலை விநியோகம் செய்யும் நண்பர்கள் தேசத்தின் குறிப்புகளுடன் தங்களுக்கு உடன்பாடில்லை என்றும், அப்படியான ஆக்கங்களைப் பிரசுரிக்க வேண்டாம் என்றும் கூறினார்கள். அதனை நாம் ஏற்றுக் கொள்ளாததால் தூண்டிலை விநியோகம் செய்வதை அவர்கள் நிறுத்திவிட்டார்கள்.

ஆக்கத்தை பிரசுரிக்காதே என்பதும், தூண்டில் விநியோகத்தை நிறுத்துவதும், தூண்டிலை வாசிக்காமலே விடுவதும் ஒவ்வொரு வாசகர்களினதும் உரிமையாக இருக்கலாம். ஆனால் நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட இரண்டாவது பிரிவினர்கூட இதைச் செய்யும்போது இது கருத்துச் சுதந்திரத்தை வரையறுக்கும் மறைமுக நிர்ப்பந்தமே. முரண்பாடான கருத்துகளை கருத்துகள் மூலம் சந்திப்பதே ஆரோக்கியமானது.

4. இந்திய-புலி யுத்தம் பற்றிய தங்கள் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை என நடராஜன் குறிப்பிடுகிறார். இவ் யுத்தம் பற்றிய எமது நிலைப்பாடு குறித்து நடராஜன் மட்டுமல்ல, இன்னும் பலரும் விமர்சித்துள்ளார்கள். கலம் 34இல் (ஒக்ரோபர்' 90) "தூண்டிலின் போக்கு" என்ற தலைப்பில் இது குறித்து சக-ஓடிகள் விரிவாக விமர்சித்துள்ளார்கள். இவர்களின் விமர்சனம் குறித்து கலம் 40இல் (ஏப்ரல்'91) "தூண்டிலின் போக்கு அல்லது எங்களைப் பற்றி நாங்கள்" என்ற தலைப்பில் நாம் எழுதிய கருத்தில், "...பிழையானதை விமர்சிக்கும் அதே நேரம் சரியானதை ஆதரிக்கவும் தயாராக இருக்க வேண்டும் என்ற விமர்சனத்தை ஏற்றுக் கொள்கிறோம். எமது கடந்தகால தலையங்கங்களில் சரியானவைகளைத் தெளிவாக ஆதரிக்காத தவறுகள் நிகழ்ந்துள்ளன என்பதை ஒப்புக் கொள்கிறோம்" என்று குறிப்பிட்டிருந்தோம். இதில் இந்திய-புலி யுத்தமும் அடங்கும் என நாம் குறிப்பிட்டுச் சொல்லாததால் நாம் இக் கருத்தை இது வரை ஏற்கவில்லை என நடராஜன் குறிப்பிடுகிறார். தெளிவாக எழுதாத தவறு எங்களுடையது தான்.

– கடலோடிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்கள்" என்ற பதம் தொடர்ந்தும் கொச்சைப்படுத்தப்பட்டே வருகிறது. கள்ளத்தனங்கள் செய்து பிடிபட்டுவிட்டால் "எல்லாம் மக்களுக்காகத்தான்" என்று பழியைப் போடுவதற்கே அரசியல் பிழைப்புக்குழுக்களும், ஆயுதபாணிக் கும்பல்களும் மக்களை வைத்து தங்களை வளர்த்துக் கொள்கின்றன. இலாபங்களை ஏமாற்றுக் கும்பல்களும், நஷ்டங்களை மக்கள் ஏற்றுக்கொள்வதுமே பெரும்பாலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

பாதிப்புகள் எதிர்விளைகளை ஏற்படுத்தியே தீரும் என்பதற்கிணங்க துன்பப்படும் மக்களும் தமது ஆத்ம பலத்தை வரலாற்றில் நிரூபித்தே வந்துள்ளார்கள். இதில் இலங்கை வாழ் மக்களும் தவறவில்லை.


அக்கரைப்பற்று-பொத்துவில் வீதியில் முஸ்லீம்கள் பிரயாணம் செய்த பஸ்ஸை மறித்து புலிகள் அவர்களைக் கொலை செய்ய முன்றபோது, அவர்களைக் கொல்வதாயின் முதலில் என்னைக் கொல்லுங்கள் என்று தமிழரொருவர் புலிகளின் குண்டை நெஞ்சில் தாங்கி மரணமானதும்,

இயக்கச்சியை அண்மிய கிராமங்களைத் தாக்கப் போகிறோம், வெளியேறுங்கள் என்று இராணுவம் நோட்டீஸ் போட்டு மிரட்டியும், அந்த இடத்தைவிட்டு நகராமலிருந்து கிராம மக்கள் இராணுவத்தைப் பின் வாங்க வைத்ததும்,

புசல்லாவ தோட்டத்தில் காணிப்பகிர்வில் தமிழர்கள் திட்டமிட்டு ஒது க்கப்பட்டதை ஆட்சேபித்து தமிழ்த் தொழிலாளர்கள் வேலை நிறுத் தம் செய்தபோது, அவர்களுக்கு ஆதரவாக சிங்களத் தொழிலாளர்க ளும் இணைந்து வேலைநிறுத்தம் செய்ததும் ,

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நிறுத்து என்று முஸ்லீம்கள் ஆர்பாட்டம் செய்ததும்,

"மக்கள்" என்பதற்கு அர்த்தம் வழங்குகின்றன. இப் பலத்திற்கு முன் அதிகார வெறியர்களும், அவர்களின் ஆயுதங்களும் எவ்வளவு காலந் தான் நிண்டுபிடிக்கும்?





# வசந்தம்

மீண்டும் சந்திப்பதற்காய்
குளிர்காலம் விடைபெறும் !

ஓடிவரும் வசந்தத்தின்
ஆசி பெற்று
மரங்கள் உயிர்பெறும்.
பூஞ்செடிகள் வர்ணங் கொள்ளும்.
பறவைகள் குரலெடுக்கும்.

மலைத்தொடர்களை மூடியிருக்கும்
பனிப்பாளங்களின் ஒளிஜாலங்கள்
சூரியனைத் தோற்கடிக்கும் !

அழகிகள் குளிப்பதற்காய்
பெல்லி ஆற்றங்கரை
தன்னைக் கதகதப்பாக்கும்.

இரக்கமில்லாப் பகற்பொழுது
இனி
நீண்டு வளைந்து செல்லும்.

நீண்டிருந்த இரவுகளுக்குள்
எனது அகதி முகத்தை
- அந்நிய முகத்தை -
ஒளித்து
என்னைக் காக்க முடிந்த எனக்கு
வசந்தத்தின் பகற்பொழுதுகள்
மாபெரும் சவால்களாய்
வீதிகளில் படர்ந்திருக்கும் !

எஸ். அருள்


தூண்டில்

யூலை-ஒகஸ்ட் 1992
கலம்: 52

ஆசிரியர் குழு: கடலோடிகள்



✉: THOONDIL
Südasien Büro
Grosse Heim Str. 58
46oo Dortmund 1
Germany

☎: (o231) 13 66 33
*(திங்+வெள் : 17.00-21.00மணி, புதன்: 15.00-17.00மணி)*



சந்தா (DMஇல்)
ஜேர்மனி: 6 மாதங்கள் = 20,-
1 வருடம் = 38,-
ஐரோப்பா: 6 மாதங்கள் = 25,-
1 வருடம் = 48,-
அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா:
1 வருடம் = 65,-
ஒஸ்ரேலியா: 1 வருடம் = 75,-

தபாற்கணக்கு இல. 3o8 o74 68
Postscheckamt Dortmund
BLZ 44o 1oo 46

*சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தாவை அனுப்பியதும் எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org